உ

ஸ்ரீ பழனியாண்டவர் துணை

கந்தர் திருவிளையாடல் என்னும்

சூரபத்மன் சுப்ரமணியர்

சண்டை நாடகம்

1) SURAPATMAN CUPRAMANIA
CANDAI NADAKAM
2) PALANI ĀNDAVR PALKAV
NADAKAM.

கொறத்தி இருமம்

வை. வீரப்ப படையாட்சி
அரங்கேத்தியவை

வெளியிட்டவர்
V. K M. அருணசல செட்டியார் சன்.
புத்தக வியாபாரம் & ஜெனரல் மர்ச்சண்ட்
திருப்பாதிரிப்புலியூர்.

காப்பிரைட் ரிஜிஸ்டர்) விலை அணா 12

KANTAR TIRUVILAIYATAL
ENNUM CURAPATMAN
CUPPIRAMANIYAR CANTAI
NATAKAM

சக்திவேல் துணை.

ஸ்ரீ கந்தபுராணத்தில் ஓர்பாகமாகிய.

கந்தர் திருவிளையாடல் என்னும்

சூரபத்மன் சுப்ரமணியர்

சண்டை நாடகம்

இவை

கூடலூர் தாலுக்கா செம்மங்குப்பம் மகா-ள-ள-ஸ்ரீ
ஜோதிடம் அண்டு வைத்தியம்
R. S. ஷண்முக உபாத்தியாயர், இயற்றியதை

Sanmuka Upattiyayar (R.S.)

கூடலூர் தாலுக்கா செம்மங்குப்பம் வேதாந்த வித்வ
மு. துரைசாமி நாடார் அவர்களால்
திருத்தப்பட்டு

கூடலூர் தாலுக்கா திருத்திறையூர் போஸ்டு
கொறத்தி கிராமம் நாடக ஆசிரியர்
வை. வீரப்ப படையாச்சியாரால் அரங்கேற்றப்பட்டு

திருப்பாதிரிப்புலியூர்
V. K M. அருணாசல செட்டியார் சன்,
புத்தக வியாபாரம், & ஜெனரல் மர்ச்சண்ட்
வெளியிட்டது

திருப்பாதிரிப்புலியூர்.
ஸ்ரீ லக்ஷ்மீ வாசன் பிரஸில்
அச்சிடப்பட்டது.

காப்பிரைட் ரிஜிஸ்டர்] விலை 0—12—0

உ

செல்வக்கணபதி துணை.

25 JAN 1958 MADRAS

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத்ததிபர்களுக்கும் மற்றவர்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில்:—கூடலூர் தாலுக்கா செம்மங்குப்பம் வைத்தியம் அண்டு சோதிடக் கணிதம் R. S. ஷண்முக உபாத்தியாயர் அவர்களால் இயற்றிய ஸ்ரீ கந்தர் திருவிளையாடல் என்னும் சூரபத்மன் சுப்ரமணியர் சண்டை நாடகம் ஆகிய இப்புத்தகத்தை கூடலூர் தாலுக்கா கொறத்திகிராமம் வை. வீரப்ப படையாட்சி அவர்களிடம் சகல சுதந்திரமும் பெற்று அடியிற் கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தயுள்ளேன இப்புத்தகத்தை மகாசனம் பொருந்திய கவர்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கிறேன் ஆகையால் இப்புத்தகத்தை என்னுடை உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப்படுத்தியிருக்கிறேன்,

இப்படிக்கு,

V. K. M. அருணாசல செட்டியார் சன்,

புத்தக வியாபாரம் & ஜெனரல் மர்ச்சண்ட் திருப்பாதிரிப்புலியூர்

நாடக நடிகர்கள்

நடிகர்கள்:—

இந்திரன்
நாரதர்
மகாவிஷ்ணு
பரமசிவம்
ஸ்ரீ சுப்ரமணியர்
பிரமதேவன்
தாருகாசூரன்
சூரபத்மன்
பானுகோபன்
சிங்கமுகன்

நடிகைகள்:—

பார்வதி
கார்த்திகைமாதர்
வாணி
தெய்வகுஞ்சரி

இயற்றியவர்
R. S. ஷண்முக உபாத்தியாயர்,
செம்மங்குப்பம்

அரங்கேற்றியவர்
வை. வீரப்பன் ஆசிரியர்,
கொறத்தி கிராமம்

26 FEB 1956

ஸ்ரீ கந்தபுராணத்தில் ஓர்பாகமாகிய

ஸ்ரீ கந்தர் திருவிளையாடல் என்னும்

சூரபத்மன் சுப்ரமணியர்

சண்டை நாடகம்

கணபதி காப்பு எண்சீர்.

திருநிறை தேவர் துயர்தனை தீர்க்க
திகழுநற் சரஹணை தன்னில்
பெருநிறை பரமன் நுதல் விழிதன்னில்
பொரிக ளாறுகவே யுதித்த
உருநிறை கந்தன் திரு விளையாடலை
உலகினில அன்பர்கள் துதிக்க
தருநிறை சித்திபுத்தி கணபதி
திருவடி துதிசெய்தேன் மாதோ

இந்திரன் வருகிற கவி

அவனியில் புகழ்படைத்த அமருபதிதனை யாளுந்திரன்
நவமணி மகுடப்பூண்டு நலந்தரும் பணியிலங்க
தவமுனிவர் ஆசிகூற தையல்மேனகை நடனஞ்செய்ய
சிவபிரான் பாதம்கோரி தேவேந்திரன் வருகின்றேனே

இந்திரன் தரு

பொன்னுலகத்தில் வாசன் கன்னிராணிக்கு நேசன்
புகழ்பெரும் இந்திரன் வந்தேன் தேவாக்கதிபதி (பு
சென்னியில் மணிமுடி மன்னும் பணிசொலிக்க
சுருள்] சித்தசன்போல மெத்தழகுள்ளோன்
பத்தியாதான தருமத்தில நல்லோன் (பொ
திருபுறத்தை எறித்த பரமன் திருவடியை
மறவாமலே தினம் மனதார பூசைபுரிவேன்
சுருள்] மாதவ முனிவர்கள் ஆசிவதித்திட
மண்டல மன்னர்கள் பேசி துதித்திட (பொ
சூரபத்மதீரன் அடிக்க தேவர்கள் தன்னை
காரிடி போலதம்பி போராது செய்கிறான் முன்னே
சுருள்] கருத்துமே வாடுதே கவலையை நினைக்க
கவலையை தீர்க்க எவரிடம் செல்வேன் (பொ

இந்திரன் கவி

சுந்திர மந்திரிமாரே சொல்லுவேன் வசனம்கேளிர்
சிந்தையும் தான்கலங்க தேவரை சூரபத்மன்
வந்துமே துன்பஞ்செய்தான் வகையுட னவனைகொல்ல
தந்திர யோசனைகள் தானுமே சொல்வீர்தானே

நாரதர் வருகிற கவி

வேதத்தை யுணர்ந்தஞானி விண்ணவர் தனக்குநேமி
பூதல மாந்தருக்கு புலமதை சொல்லவல்லோன்
பீதாம் பரமணிந்து பெருவேத மறைகள்பேசி
சீதரன் தனக்குபோன் திருலோக சஞ்சாரி வருகின்றேனே

நாரதர் தரு

நாரண யுந்தியால் வந்த காரண வேதன் சேயன்
நாரத மகாமுனிவர் வந்தார் கலகத்தில் வல்லோன்
சாரதா மைந்தனிதோ வாறேன்
பூரண பானவேதம் பாராயணம் செய்தேன்
சுருள்] பூமியில்காமிய ராசையை வெருத்தேன்
நேமிய அன்பர்கள் நிலைக்கவே சிறந்தோன் (நா
சடைமுடி யிலங்க இடையில் காவிதுலங்க
சாதுக்க ளடிபணியவே மேருகிரியிலுள்ள
சங்கமர் மனஞ்சளிக்கவே
உடல்முழுதும் வெண்ணீர் உகந்து மிகத்தரித்து
சுருள்] உத்தம வேதத்தை மெத்த யறிந்தவர்
சத்துரு மடியவே சுத்தமா சுழிப்பவர் (நா
பாவி சூரபத்மனை ஆவதனை யொழிக்க
பாலசுப்ரமணியர் யுதிக்கவே இந்திரனிடம் சென்று
பகருவேன் தந்திரம் துதிக்கவே
தாவி நடைநடந்து மேவி பலருங்காண
சுருள்] சந்தேகமில்லாத தந்திரதீரன்
சுந்திர இந்திரனை காணவே வீரன் (நா

நாரதர் கவி

பலகலை தனையறிந்த பாசமுள்ள முனியேகேளீர்
இலகியே இந்திரனிடம் ஏகியே இன்றநாளில்
கலங்கிட சூரன்சேனை கந்தன்தோன்றி மடியசெய்ய
புலமதை யுரைத்துவாறேன் பேசியே அமருவீரே

நாரதர் தரு

இமையகிரி தன்னைவிட்டுமே நாரதமுனி
இன்பமாக ஏகிவாராரே இந்திரலோகம்
கரதகில் தண்டு கமண்டலங் கொண்டுமே நாரதமுனி
கானகமலை கடந்துவாறாரே நாரதமுனி
ஆழிமீட்டி கீதம்பாடினார் சந்தோஷமாக
அரனை துதித்து ஞானம்பாடினார் நாரதமுனி

இந்திரன் தரு

மாமுனியோரே வாறுமே சந்தோஷம் கொண்டேன் (மா
மாமுனியோரே யுந்தன் மலர்ந்த திருவடிக்கு
பூமி புகழும்மன்னன் போற்றி பணிந்துநின்றேன் (மா

நாரதர் தரு

பாதம் பணிந்தஇந்திரு சுகமாக நீவாழ்குவாய் (பா
பேதகம் எண்ணவேண்டாம் வேதனே வந்ததென்று
போதக இந்திரா புகலும் சந்தேகம்தன்னை (பா

இந்திரன் தரு

பாவிசூரன் வந்துமே தேவரை வதைக்குறான் (பா
பாவிசூரன் தன்னை ஆவிதன்னை வாங்க
போதக இந்திரா புகலும் சந்தேகம்தன்னை (பா

நாரதர் தரு

சூரன்தன்னை மடிக்கவே தந்திரம் சொல்வேன் (சூ
சூரன்தனே மடிக்க தேவர் யாவருங்கூடி
சுந்திர மாலிடம் சந்தேகம் சொல்வீர்காடி (சூ

இந்திரன் கவி

நாடியே தேவர்கூடி நாரண னிடமேசென்று
தேடியே முறைகளிட்டால் திருமாலுயதன் பிறகு
வாடவே சூரன்தன்னை வதைசெய்வ தெந்தகாலம்
கூடியே தந்திரத்தை கோறுவீர் முனியேதானே

நாரதர் கவி

அஞ்சவு வேண்டாமப்பா அரனிடம் திருமால்சென்று
துஞ்சவே சரஹணையில் சிவகுப்ர மண்யர்தன்னை
பஞ்ச முகமுடைய பரமனால் யுற்பவிக்கசெய்து
தஞ்சமென சூரனை சங்கரிப்பாரே சொன்னேன்

இந்திரன் தரு

நாரதமுனி வாக்குபடி காரண மறியவேண்டி
நாடியேவைகுந்தம் நாடியே தேவரெல்லாம்
நல்லமொழி கூறிவிகினர் (கா
அச்சுதா கேசவா என்று அமரர் முனிவரெல்லாம்
அன்புடனே துதி செய்துமே வைகுந்தம்காடி
ஆனந்தமாய் வந்துமேவினர் (கா

மகாவிஷ்ணு வருகிற கவி

சங்காழி கரங்கொண்ட சாமளை தானெழுந்து
செங்கதிர் மணிமுடிபூண்டு திருமுகத்தில் நாமம்சாற்றி
மங்கைலட்சுமி மார்பிலங்க மாதர்கள சாமரைவிச
பங்கையன் தனைபடைத்த பரந்தாமன் வருகின்றேனே

மகாவிஷ்ணு தரு

ஹரியும் சிவனும் ஒன்றாகுய் அமர்ந்த சோதியான
அரவசேஷ ஐயனன்வந்தேன் திருமூவரில் ஒருவர்
அன்பர்க்கு வரமதை தந்தேன்
பரிவுள்ள தேவர்கள் நெருங்கி நாம்குவிக்க
பகரும் தாரகஜெபம் நேருய் யாரும்துதிக்க

பாவலர்பாட பஜனை கோஷ்டிகள்தேட
சருள்] பாரதை பளந்த நாரணன் தானே
காரணமூவரில் கண்ணனும் தானே (ஹரி
ஆயிரத்தெட் டண்டமாண்ட அரக்க இரணியனை கொல்ல
அரியெனும் நாமம்போதிக்க பிரகலாதனை
அனுப்பினேன் மனம்சோதிக்க
அயன்ஹரி எங்கேஎன்று அசுரன் தூணையுதைக்க
வடிவநரசிங்கமாகி துடிக்க கிழித்தவனை
வானவர் புகழ பிரகலாதன் மனமதுமகிழ
சருள்] வரமதை தந்து மகுடமும் தரித்தேன்
ஆதிய பக்தருக்கு வரமதை யளித்தேன (ஹரி
குறத்திநகரில் வாசன் கூறு வன்னியகுல
கோறும்வைத்தியலிங்கம் ஈன்றபாலன் வீறப்பன்
குலாவு விஷ்ணுபக்த சிலன்
கருதிகழ் புகழ்திரு கண்பனும் கேட்டபடி
நானிலம் மதிக்க கந்தன்சரிதை காணுவோர் துதிக்க
சருள்] நலம்பெரும் ஷண்முகம் பாடியே கொடுத்தேன்
புலவர்கள் சீர்பிழை திருத்தவே மதித்தேன்

மகாவிஷ்ணு கவி

வைகுந்தம் தனிலமர்ந்த வல்லமை காவலகாறுய்
துய்யஎன் திருவடியை துதிசெய்து பணிந்ததாலே
பையவே ஆசீர்தந்தேன் பலகோடி காலம்வாழ்க
உய்யவிஷ்ணு பக்தர்வந்தால் உறைசெய்வாய் அறியதானே

இந்திரன் விருத்தம்

ஆலிலை மீதுபள்ளி ஆழியில் தானுங்கொண்ட
நீலமேகனே சுவாமி நெடியநல் திருவடிக்கு
மேலான மலர்களோடு மணிதுளப மலர்கள சாற்றி
சாலவே தேவரெல்லாம் தாளடி பணிந்திட்டோமே

மகாவிஷ்ணு தரு

வந்தனம் செய்திட்ட தேவரே சுகமாய்
வாழ்துவாய் யாவரும் தேவரே
சந்தோஷமுடனே வந்த சேதிதன்னை
குந்தகமில்லாமல் கோறுவீரே முன்னே (வ

இந்திரன் தரு

சூரபத்மன் வந்துதேவரை சிறை
தீரனுங் கொண்டதால் யாவரை
வீரமுள்ள சூரனை பாரளந்த கண்ணே
தாரணி புகழவே சங்கரிப்பீர் வண்ணே (சூ

விஷ்ணு தரு

சங்கரிக்கசூரனை முடியாதே என்னால்
சாற்றிட வல்லமை கிடையாதே
பங்கையன் சிரங்கொய்த சங்கரனிடம்சென்று
உங்கள் குறைகளை உரைசெய்குவீர் இன்று

இந்திரன் தரு

உலகமதை யளந்தமாலே தேவரோடு
உத்தமா வருவீர் பெருமாளே
இலஷிய யுன்பாதம் யாவரும் போற்றினோம்
கலகத்தை தவிர்ப்பீரே கண்ணனை ஏற்றினோம்

விஷ்ணு கவி

தேவர்களெல்லோருங்கூடி திரிபுர தகனன்னைலை
தாவியே வந்துசேர்ந்தே சகலதேவரும் சூழ
ஆவலாய் எங்கள்குறை அகற்றிட வேண்டியானும்
சேவடி பரமனை தெரிசிப்பீர் நீங்கள்தானே

பரமன் வருகிற விருத்தம்

நமசிவாயா வென்றும் ஐந்தெழுத்தில்
நாதனை யுதித்துமே விளங்கும்நாதன்
உமையவளுக் கிடபாகம் தன்னைதந்து
ஓங்கார மூர்த்தியை தங்கசோதி
அமரர்கள் மனங்களிக்க பருவதனுக்கு
அன்புள்ள மருகனாய் நிறைந்தகியாதி
எமன்திருகி மார்க்கண்டன் நந்திசூழ
ஈசனுங் கொலுவாக வருகின்றேனே

பரமன் தரு

சிவலிங்க மகாமூர்த்தி வந்தார் நல்ல
சித்தர்கள் பக்தர்கள் வந்தடி போற்ற
சிறந்த வரங்களையே தந்தார்
எவர்களும் துதிசெய்ய எங்கும் நிறைந்தினரோர்
இருதயத்தில் சிவசாக்ஷியாய் அமைந்துள்ளோர்
சுருள்] எத்திசை யுலகமும் மெத்த படைத்தவர்
சத்தி சிவனுமாய் சமைந்து நின்றவர்
தக்கன் எந்தனை மதிக்காமல் அவன்
தான்கொண்ட கெர்வ வீண்மத மழிக்கவே
தனியானை பனீர் வேர்வை யுதிககமேல்
திக்குதிசை யுள்ளோர்போற்ற நிரவிய பத்மன்சொன்ன
திகழ பாசமுடனே மகிழ வரத்தையுன்ற
சுருள்] திடமுள்ளயாக சாலையை அழித்தனன்
படங்கொண்ட தக்கனை பதரிட வதைத்தனன்
கல்லாலின் கீழேதங்கியே மூன்

கதிக்க ஜனகன் ஜனகாதியர்க்கு
கற்பித்தேன் ஞானத்தை யோக்கியே
தொல்லைதன்னை நீக்க நல்லயோகியாய் அன்று
தோன்றுஞான மௌன சுத்த நிலையாய் நின்றேன்
சுருள்] துணிந்துமே மதன் கணைதனை தொடுக்க
நீக்கண் விழித்தேன் எறிந்தனன் அடிக்க

பரமசிவம் கவி

நந்தியே சொல்வேன்கேளாய் நல்லதோர் கணங்கள்சூழ
விந்தையுள்ள யம்பலத்தில் வீற்றுமே இருந்தோம்நாமும்
சுந்திர பார்வதிக்கு சொல்விடவேகம் தன்னைஇங்கே
சந்தேக மில்லாமல் சபைகாடி வரச்செய்வீரே

பார்வதி வருகிற விருத்தம்

தாண்டவ மாடியசன் லைதயலே யழைக்ககேட்டு
ஆண்டவன் பாதங்கோரி அரிவைதாதி யர்கள்சூழ
வேண்டிய பணிகள்பூண்டு விரிஇதழ் மலர்கள்சூடி
பாண்டியன் மகளாய்வந்த பார்வதி வருகின்றாளே

பார்வதி வருகிற தரு

பாருல கோர்துதி பருபா மானசோதி
பார்வதியம்மன் வந்தாள் உலகமாதா (பா
காருண்ய கடவுளை கருத்தில் தினம்துதித்து
சுருள்] கங்கண கடகம் செங்கையில் இலங்க
மங்கள மொழிகளை நங்கையர் விளங்க (பா
பாவிதக்கண் வேள்வியில் பாவை யவதரித்து
பரமனை மணமும் புரிந்தேதன் மனமது மகிழவே (ப
தாவியே இவ்வுடலை தறித்திடவே வெறுத்து
சுருள்] சங்கரனல்வாம் நங்கையும்பெற்று
மங்கையும் எடுத்தேதன் மருவு அவுற்று (பா
வெண்ணீர் மெய்யில்பூசி நண்ணிய வேதம்பேசி
லெகநாரணியும் வந்தாள் பரமன் பங்கல் (வே
வணமையுள்ள நல்ல வாசனை மலர்கள்சூடி
சுருள்] ருசி பூரணி நாரணி இவளே
பெருகிய யுலகுக்கு காரண பொருளே (பா

பார்வதி தரு

பங்கையனை சிறங்கொய்த சங்கரசிவனுதா
மங்கையாளும யுகதன் திருமலரடிக்கே நீதா
சுருள்] மல்லிகை முல்லை மலரதை சாற்றி
தொல்லையைநீக்க அதித்தேனே போற்றி (ப

பரமசிவம் தரு

போற்றிபாதம் பணிந்துநின்ற நேர்த்தியுள்ள பார்வதியே
காற்றிசையு கீர்த்தியோங்க நாரணியே வாழ்மதியே

சுருள்] நலம்பெற ஆசிர் வதித்தேனே மாதே
கலகமிலாமலே கருத்துதைை கோதே (பே

பார்வதி தரு

சோதி மதிசூடரூண ஆதிசிவ ஞூதனுரே
வேதமதை எந்தனுக்கு விபரமாக இன்றுநாளில்
சுருள்] வோதிடுவாய் மிக பேதகமில்லாமலே
மாதுமே யறிந்து மகிழுவேன் ஞால (சோ

பரமசிவம் தரு

மங்கையென்னும் பார்வதியே நங்கையே சொல்வேன்கேளும்
சங்கமர்க்கு முத்திதந்த சகலவேதத்தை நாளும்
சுருள] சாற்றுவேன்மிக தையலே அமரும
நேற்றியுள்ள யம்பலம் தன்னிலே நீரும் (ம

பார்வதி விருத்தம்

அப்பமா மதியணிந்த ஆண்டவா சொல்வேன்கேளும்
துப்புடன் தானுறைந்த தூபநல வேதமகொண்டேன்
கப்பிய அன்பர்கள் கைலைநாடி வருவாரிங்கே
தப்பாமல் அவர்களுக்கு தகுந்தவரம் அளிப்பீர் தானே

விஷ்ணு தரு

வேதன் சிரசைகொய்த நாதனே யுந்தன திரு
பாதமதிலே நலல பரிமள மலர்கள்சாற்றி
சுருள்] பத்தயாய் துதி உத்தமன்செய்தேன்
அத்தியை யுரித்த ஆண்டவா உய்தேன் (வே

பரமசிவம் தரு

உய்யுந்தாரகஸ்ரீ வையமுண்ட சிதரு
பையவே ஆசிவரதம் பகர்ந்தேன் தாமோதரு
சுருள்] பக்தர்கள் சித்தர்கள் உத்தமர்சூழ
தக்கவே வந்ததை சாற்றவீர் தாழ (உ

பார்வதி தரு

அண்டமதையளந்த கண்ணனே எனது அண்ணு
புண்ணிய யுந்தன் திரு பொன்னடிக்கே வண்ணு
சுருள்] பூவைபார்வதி போற்றியே பணிந்தேன்
சேவைதந்திடும் சேயிழை துணிந்தேன் (அ

விஷ்ணு தரு

திருவடி பணிந்துநின்ற பருவதராஜன செல்வியே
பரமனிட பாகம்நீங்கா பாவைவாழ் புல்லியே
சுருள்] பரந்தாமன் என்னிட சிரந்தநல் தங்கை
பகருவாய்மொழி அகலாமலை மங்கை (தி

இந்திரன் தரு வேறு

தேவா வந்தனம் செய்தேனே நலல
திங்களுங் கங்கையு சிரமதி லணிந்த (தே
மூவர்க்கு முதல்வனை முக்கண்ணு யுந்தன்பாதம்

சுருள்] முல்லை மலருடன் மல்லிகை சாற்றி
முறைப்படியே தேவர்கள் பணிந்தோமே போற்றி

பரமசிவம் தரு

பாதம் பணிந்த இந்திரா நல்ல
பலகோடி தேவருடன் நிலைத்துமே வாழ்வீர்
வேதனை யுங்களுக்கு வெகுண்டுமே வந்ததென்ன
சுருள்] விண்ணவ முனிவர்கள் நண்ணுவீர் சேதி
வண்ணமாகப் பதில வகுப்பேனே நீதி (பா

இந்திரன் தரு

பாவிசூர பத்மனால் நாங்கள்
பலவித கஷ்ட நிலைமையும் கெட்டோம் (பா
ஆவியும் சோருதே அமரர் துயர்தவிர்ப்பீர்
சுருள்] அன்னைமேலே வண்ணமே குணணிமேம் தேவா
எண்ணி மனதிரங்கி இயம்பிடு மூவா (பா

பரமசிவம் கந்தார்த்தம்

சூரன்இம்சை தாங்காமல் சிரமது வணங்கதேவர்
பாழிக்கசிவன் கோபம்கொள்ள பஞ்சமுகத்தி லதோமுகம்
[தோன்றி
சிரமே கண்விழியில் சிந்தித்து பொரியெழும்ப
விரமுள்ள தேவர்கண்டு

தரு

வெகுண்டு பயந்துஓடினார் திக்குபாலர்கள்
திகைத்து மனதுவாடினார்
அகண்ட பொரிகளாறு அக்கினி சுவாலைவீச
சுருள்] அண்ட சராசரம் பண்டு முனிவர்கள்
குண்ணியே வாடி நண்ணியே தியங்க

விஷ்ணு கந்தார்த்தம்

மைத்துனா சொலவேணகேளீர் மகாகோடி தேவரெல்லாம்
மெத்தவே யக்கினியைகண்டு மிரண்டுமே டயக்குசென்றார்
பதியா யுலகமெல்லாம் பாழடைந்து போகுமினி
சித்தசனை தாமெறித்த

தரு

சிவனே கோபத்தை தணிப்பீர் அக்கினி பொரிகள்
சிதறாமல் தணிப்பீர்
தவத்தில் மிகுந்ததேவர் தகித்திடார் அக்கினியைகண்டு
சுருள்] தாரணியுலகம் ஈரேழும் கஷ்டம்
போரணி யடைந்தார் புவியிலே நஷ்டம் (சி

பரமன் தரு

திருநுதல் விழியில் பொரிகளாறுக வந்த
சேதிகளையே சொல்லேன் சீதா னேசேளும்

பெரும்பழி நினைத்தசூரர் கருவை யழித்திடவே
உருவாகி அக்கினிகள் உதித்ததே மகதிகைக்க
ஆறு பொரிகளாகி சிரின அக்கினியை
ஆற்றிட முடியாதினி அதற்கு விபரம்சொல்வேன்
அக்கினி வாயவுதேவா அன்புடன் தேவர்கூடி
அகண்ட சரஹணையில் அக்கினி தனைவிடுவீர்
மிக்கவே தான்விடுத்து பக்குவம் அதற்கனேகம்
மிதமிஞ்சி போகமல் முறைபடி செய்வீர்தானே

இந்திரன் கவி

அக்கினி பொரிகளாமை அகலாமல் கரத்தில்தாங்கி
தக்கவே சரஹணையில் தாவியே விட்டதேவர்
அக்கமாலை யணிந்த ஆண்டவன் கிருபையாலே
பக்குவ மாகயாறு பாலகர் பிறந்தார்தானே

விஷ்ணு கவி

சரஹண பொயகையிலாறு சங்கரன் மைந்தர்தோன்ற
திரமுடன் அஷ்டபாலர் தேடியே காவல்செய்வீர்
வரம்பெற்ற கார்த்திகேய வஞ்சியர் ஆறுபேரை
பரந்தாமன் அழைத்மதனென்று பாவையை வரச்செய்வீரே

கார்த்திகேய பெண்கள் வருகிற விருத்தம்

மூர்த்தியி லொருவரான முகுந்தனு யழைத்தசேதி
கார்த்திகை பெண்களாறு கன்னியர் கேட்டெழுந்து
நேர்த்தியாய் பணிகள்பூண்டு நிகரிலா மலர்கள்சூடி
பார்த்தவர் தான்திபங்க பாவையு வருகின்றோமே

கார்த்திகைமாதர் தரு

வந்தார் கார்த்திகை என்னும்மாது அருவர்கூடி
வாரார் கார்த்திகையெனனும் மாதர்
மந்தாரை முல்லைசூடி மாதர்களுடன் கூடி
சுருள்] மாதவ முனிவர்கள் ஆசீர் வதித்திட
பேதமை மாதர்கள் பேசியே துதித்திட (வ
செங்காபமறவனைத் துன்ன திருமுகத்தில்
சிறந்தமை திலகமினை
அந்தி வண்ணன்பாதம் அரிவையர் துதிசெய்து
சுருள்] அந்தரி சுந்தரி அம்பிகைமாது
மைந்தரை கண்டு மகிழ்ந்திட சாது (வ

புதிய நாடகம் கிடைக்கும்
மந்திராவதி திருமண மென்னும்
கண்ணன் — காண்டீபன் சண்டை நாடகம்
விலை அணு 0-12-0

திருமால் தானழைத்சேதி இன்னதென்று
சேயிழையர் காணீதி
அருந்தவ முனிவர்கள் அஷ்ட திக்கு பாலர்
சுருள்] அன்புடன்சூழும் சபைதனில் செல்ல
கன்னியர் வந்தோம் களிப்புடன் மெள்ள

கார்த்திகைமாதர் தரு

கண்ணனே சரணம் மேக வண்ணனே சரணம்
கண்ணா மணிவண்ணா விண்ணோர் சகாயனே
மண்ணளந்த திரு மலரடி போற்றினோம் (க

விஷ்ணு தரு

மாதரே வாழி கார்த்திகேய மாதரே வாழி
மாதரசே நீங்கள் பூதலம் தன்னிலே
பேதகமில்லாமல் பூவைவே வாழ்குவீர் (மா

கார்த்திகைமாதர் தரு

சீதரு கேளும் இன்றுநாளில் மாதவா நீரும்
கோதையர் தன்னையே கோரியழைத்ததை
மாதர்களறிய மணிவண்ணா யுரைத்திடு (சீ

விஷ்ணு தரு

பெண்களே நீரும் சரஹண பொய்கைக்கு வாரும்
அண்ணல் சிவன்மைந்தர் அறுவர்க்கு பாலூட்டி
வணமையாக நீங்கள் வளத்து வருவீர்நாட்டில்

கார்த்திகைமாதர் கவி

சரஹண பொய்கைசென்று சங்கரன் மைந்தருக்கு
காப்பமறி பாலூட்டி கண்ணனசொன்ன வாக்குபோல
அருவையே வருகுவீர்கள் அழகுள்ள பொய்கைநாடி
சிறப்புள்ள மைந்தரை சேயிழை கண்டோமதானே

கார்த்திகைமாதர் தரு

பொய்கையில் விளையாடும் பாலரே என்னை
புண்ணியம் செய்தமோ கண்ணால் யுங்களைப்பார்க்க
அய்யமில்லாத சிலரே
தையலும் யுங்களுக்கு தாயாக வந்தோம்
பையவேதடாகம்விட்டு பாலரே வருவீர்சொந்தம்
ஓடிவருவீர் மைந்தரே சோதி
உத்தம சிவனுக்கு புத்திரா யுதித்த
உம்பர் மகிழும் சுந்திரா
ஆடும் பரமன்விழியில ஆறுபொறி யாகதோன்றி
அசுரரை கருவருக் வசதியாய் வந்தீர்யூன்றி (பொ

கார்த்திகைமாதர் சிசபத்தியம்

அப்புமா மதியணிந்த ஆண்டவன் மைந்தாநீங்கள்
கப்பியே எங்களிட கும்பஸ்தன பாலையுண்டு

தப்புடன் வளர்வதால் தோஷையும் மகிழ்கொண்டோம்
தப்பிதம் செய்யாமல தனையனை வளர்வீர்தானே

பரமசிவம் விருத்தம்

மங்கைபார் வதியேகேளாய் மைந்தர்கள் ஆறுபேறு
தங்கும்கல் சரஹணையில் தையலிடம் வளர்வதாலே
நங்கையே சென்றுநீயும் நல்லதோர் மைந்தரைகண்டு
அங்கமும் தான்பூரிக்க அவர்களை எடுத்துவாறும்

கார்த்திகைமாதர் தரு

தம்பி முகனை ஈன்ற அம்பிகா புன துபாதம்
நம்பியே கார்த்திகைமாதர் நங்கை பணிந்தோசதம்

பார்வதி தரு

பாதமதை போற்றிசெய்த பாவையே கார்த்திகைமாதரே
பூதலத்தில் சுகமாக பூவையர் வாழ்வீர்கோதே

கார்த்திகைமாதர் தரு

கோதை எங்களைநாடி மாதுநீ வந்ததென்ன
பேதகமில்லாமல் யோதிடுவீர் முன்னே

பார்வதி தரு

வந்தசேதியை சொல்வேன் சுந்திர எனதுபாலர்
விந்தை தன்னையேபார்க மெல்லிவந்தேனே அம்மா

கார்த்திகைமாதர் விருத்தம்

ஆனிட சேயரான அன்புள்ள மைந்தர்தானும்
சரஹணை பொய்கைதன்னில் தாவிவிளை யாடுகின்றார்
கரம்பற்றி சேயர்களை கன்னியர் எடுத்துவந்து
சிறந்தஇலை தாமரைமேல் சேயரை விட்டோம்தாயே

பார்வதி தரு

பாலரே வாரும் பாலுண்ண சீலரே வாரும்
ஆலமுண்டோன் விழியில் ஆறும்பொரி யாகவந்த
அன்புள்ள பாலரே துன்பத்தை நீக்குவீர (பா
ஆறுகுழந்தையை வாரி மார்போடு அணைததேனவாரி
சீறுங் குழந்தையாறும் சேர்ந்து ஒன்றாய்கூடி
சிறந்த வடிவம்ஒன்றாய் உறைந்தனர்கள்நாடி (பா

பார்வதி விருத்தம்

என்னமோ ஈசாயுந்தன் எழில்பெருஞ் செயல்தானோ
பன்னிய குழந்தையாறும் பாவையுந்த மூவிதொட்டேன்
சென்னியு ஆறுமாக சிறந்தகரம் பனிரெண்டாக
ஒன்றாக சேர்ந்துவிட்டார் உம்பெருமானே பாரும்தானே

பரமசிவம் கவி

சரஹண பொய்கையில்வந்த சண்முக பெருமானைகண்டு
பரமனுஞ் சந்தோஷித்தேன் பரிவுள்ள தேவர்போற்ற

திரமுடன் வயதலைந்து செல்வனுக் கானதாலே
சிறந்த சபையைகாடி சேயனை யழைப்பீர்தானே

சுப்ரமணியர் வருகிற கவி

அப்புமா மதியணிந்த அரனிட நுதல்விழியில்
கப்பியே பொறியாறுகி கார்த்திகைமாதரிடம் வளர்ந்தபாலன்
அப்புள்ள முனிவர்கள் துதித்துமே போற்றிநிற்க
சுப்ர மணியபாலன் சபைகாடி வருகின்றேனே

சுப்ரமணியர் வருகிற தரு

சங்கரன் நுதல்விழியில் தகித்துப்பொறி யாறும்வந்த
சண்முகப் பெருமான் வந்தேன் தந்தையைக்காண (ச
மங்கை கார்த்திகைமாதர் மனது களிக்கும்பாலன்
சருள்] மாதவ முனிவர்கள் ஆசிர் வதித்திட
பூதல மாந்தர்கள் போற்றியே துதித்திட (ச
ஆறு முகமுடனே அஸ்தம் பணிரெண்டும்
அழகியே காமிலங்கவே விந்தையதாகவே (அ
கோலும் கவவிரர்கள் கூடிதோழராய் சூழ
சருள்] கோதிலாஞான கலைகளை யறிந்தவர்
குஞ்சா முகத்தோன் தனக்குமே இளையவர் (ச
எங்கும் நிறைந்துநின்ற இன்பமுள்ள தந்தையார்
எந்தனை தானழைக்கவே சந்தோஷமாகவே (எ
செங்கதிர் வயல்சூழ் செம்மங்கும்பம் நகரிலவாசன்
சருள்] சிறுவன் சண்முகம் செந்தமிழ்க் கருணை
சிந்தித்தேனருள் செல்வமும் பெருக (ச

சுப்ரமணியர் தரு

தந்தையாரே வந்தனம் தாள்பணிந்து நின்றனன்
மைந்தனென்னை காத்திடுவாய் மதியணிந்த தந்தையே

பரமசிவம் தரு

சரணம்செய்த மைந்தனே சரஹண சண்முகனே
சகலகலை வேதம்வோங்க தரணியில் வாழ்வாய் பாலனே

சுப்ரமணியர் தரு

தாயேயுந்தன் பாதமே தாள்பணிந்து போற்றினேன்
சேயனென்னை காத்திடுவாய் சித்தர்தொழும் அன்னையே

பார்வதி தரு

அப்பாயெந்தன் செல்வமே ஆறுமுகமாய் வந்தமைந்தனே
அரக்கர்களை சம்கரித்து ஆள்வாய்மேலாய் கண்மணி

சுப்ரமணியர் தரு

மாமாயுந்தன் பாதமே மதிமுருகன் தானுமே
மலர்களையே சாற்றியே மருகன் பணிந்தே காறுமே

விஷ்ணு தரு

மருமகனே வாருமே மகிழ்முருகா நீருமே
மகாராஜனாய் என்தனுளும் வாழ்ந்திடுவாய் நீருமே

சுப்ரமணியர் தரு

அன்பாய்வளர்த்த அன்னையே அருவர்பாதம் பன்னியே
அடிபணிந்தேன் முருகன் ஆசிர்வதிப்பீர் என்னையே

கார்த்திகைமாதர் தரு

கார்த்திசேயா வாருமே கண்மணியே நீருமே
காசினியில் சுகமாக கண்மணியே வாழ்குவாய்

பரமசிவம் கவி

அரக்கர்களை கருவருக்க ஆறுமுக மாகவந்த
சரஹண பவனேநீயும் தங்கியே கந்தகிரியில்
காங்கொண்ட நவவீர கணங்களோடு கூடி
சிரஞ்சீவியாக செல்வனே இருப்பாய்தானே

பிரமன் வருகிற கவி

கார்வண்ணன் சேயன் கலைவாணிக்கு நாதன்
பார்புவி ஜீவஜந்தை படைத்து காக்குவேதன்
சேர்மையாய் பணிகள்முத்து நல்லதோர் மகுடம்பூண்டு
சீர்புகழ் விருஞ்சிநகர் திசைமுகன் வருகின்றேனே

பிரமன் வருகிற தரு

ஆதிநாரணன் மைந்தன் அரனுக்கு மருகனுன
அயனும் கொலுவதாகினுர் நல்ல
அருமறை நெறிமுறை தவருத புறவல (அய
நாதுங்கலை வாணி உகந்து அடக்காய்தர
ஊரும் அன்னவாகன ரூடாகர்வ வேண
கருள்] உத்தமெந்தலை சித்தமகிழ்ந்துமே
பத்தியாய்தினம் நததிவணங்கிட (ஆ
நால்வகை தோற்றபான எழுவகை பிறப்பையெல்லா
நன்கு படைக்கமூர்த்தியே திரு
ஞாலமும் ஆலமும் வேல்காலதியும் (ந
மால்வரை விதிப்படி மாந்தர்ஜெந்து அசுரர்களுக்கு
மாறு தனுக்கான புவன போகமளிக்கும்
கருள்] மாதவனைத்தினம் மனதிலெண்ணி
போதேவ மன்றய் பொருந்திட எண்ணி (ஆ
பாரில் உள்ளுபபுமம்பும் பரமன் உணர்வாய் நிர்க
பரிந்து உயிர்கள தோணுமே மிக்க
பாசமும் நேசமும் ஆசையு மிசைந்து
நேரில் பாவபுண்ணியம் நிலைக்க சலமுடிவில்
நியதி செய்துளனக்கு நீங்கா தொழிலுக்கும

அருள்] நின்மலவேணியன் ரெடியபூம்பதம்
நேன்மலர் கொண்டுமே தெரிசித்தேன் நிதம் (ஆ

பிரமன் கவி

பாதமே பணிந்துநின்ற பரிவுள்ள தேவரேகேளீர்
பூதலம் தன்னில்மிக்க புகழ்பெற வாழ்வாய்காளும்
வேதமே யுருவாய்வந்த வித்தக வாணிதன்னை
காதலு யழைத்தேனென்று நங்கையை யழைத்திடரே

வாணிவருகிற விருத்தம்

அலைகடல் சூழ்புவி அகிலமும் தான்நிறைந்த
பலகோடி ஜீவன்தன்னை படைத்திடும் வேதன்தேவி
சிலைநுதல் திலகமிட்டு சித்திர பணிகள்பூண்டு
கலைவாணி யெனும் கன்னியும் வருகின்றேனே

வாணி வருகிற தரு

மந்தாரை முல்லைசூடி மங்கைமா ருடன்கூடி
கந்தமலர் வாடைவீச கலைவாணி வாறேன்
நெத்தியில் திலகம்சூட்டி நேர்விழிக்கு மையெழுதி
கர்த்தனார் மனங்களிக்க கன்னியும் வாறேன்
சேலை தகதகன்ன சித்திடை யொட்டியாணம்மின்ன
மாலை பணிகுலுங்க மங்கையு வாறேன்
காலி லணிந்த தண்டை கலகலகலவென்ன
பாலன் ஷண்முகம்போற்றும் பாவையு வாறேன்

வாணி கொச்சகம்

என்னடி சேடியே இன்றைய நாளிரவில்
கன்னியாள் நித்திரை கனகமஞ்சத்தில் செய்கையில்
மன்னவர்க்கு கெடுதியாய் மங்கையு சொற்பனம்
பன்னிவே கண்டேனே பாவையாள் என்செய்வேன்

வாணி தரு

செந்திருக் கமலக்கண்ணன் சுந்திர மைந்தனை
நாதா பிராண நாதா
மந்தாரை மலர்சாற்றி உந்தனிட பாதமதில்
பணிந்தேன் நாதா பணிந்தேன்

பிரமன் தரு

வந்தனம் செய்துநின்ற சுந்திர தனில்மிகுந்த
தேவியே எந்தன் தேவியே
எந்தனிட பாதமதை வந்துநீ பணிந்தாலே
வாழி சுகமாய் வாழி

வாணி தரு

வாழியென்று வாக்குரைத்த ஆழிகொண்டோன் மைந்தா
நீரும் இன்று நாளும்

தாழ்விலா வேதமதை தையலர்க்கு விபரமாக
கோறும் நாதா நீரும்

பிரமன் தரு

தையலே கைலைநகர் அய்யமில்லா தேவரோடு
கூடி! நாளும் கூடி
பையவே சிவனை கோரி பாசமுடன் துதிசெய்து
வாறேன் பெண்ணே வாறேன்

வாணி கவி

சொன்னது சரிதான்நாதா சுந்தரி சொல்வேன் கேளும்
கன்னியாள் அநேககெட்ட கனவது தானுங்கண்டேன்
என்னமோ கெடுதிகாலம் இன்றுமே யுந்தனுக்கு
மன்னவா போகவேண்டாம் மங்கையும் மறித்தேன் தானே

பிரமன் தரு

மங்கைநீ தடுக்கவந்த மாதேதில்லடி அடி மாதேதில்லடி
சங்கரனை கண்டுபூசை செய்துவாறேனே பூசை செய்துவாரேனே

வாணி தரு

கன்னியாள் எந்தன்மொழி மன்னவாநீறு எந்தன் மன்னவாநீறு
கட்டழகா தட்டிசென்றால் கஷ்டம்நேருமே நாதா கஷ்டம்நேருமே

பிரமன் தரு

கஷ்டமது எந்தனுக்கு நேருதுபெண்ணே அடி நேருதுபெண்ணே
கண்ணனவா என்குறையை தீர்ப்பாரேதானே அடி தீர்ப்பாறேதானே

வாணி தரு

சண்ணனை வண்ணனும் முடியாதேநாதா தீர்சமுடியாதேநாதா
எண்ணங்கொண்டு கைலைநகர் போகவேண்டாமே நாதா வ

பிரமன் கவி

போகவேண்டாம் கைலையென்று பூவையே சொல்லவந்தாய்
நாகமணி பாமனோடு நற்பகை இல்லையென்றும்
ஆகாதகனவு கண்டேனென்று அரிவைநீ தடுக்கவந்தாய்
ஏகவே தேவரோடுபோக ஏந்திழை விடைகொடாயே

வாணி தரு

என்ன மதியுகங்கொண்டு கன்னியாள் எந்தனைவந்து
இன்பமாய்விடையுங் கேட்டீரே நாதநீதா
ஏந்திழை சொல்லை விட்டீரே (ஏ

பிரமன் தரு

வேதமறை வாணியே வோதிடுவாய் துன்பம்தன்னை
வேந்தர் யாராலேஆபத்து மாதேகோதே
விள்ளுவாய் பதில்ஸ்தாபித்து (வே

வாணி தரு

வள்ளல்சிவன் மைந்தனாலே வருமே யுனக்காபத்து
வாணி யுரைத்தேனின்றுமே நாதாநீதா
வாதுபேசாதீர் வெறுத்துமே (வ

பிரமன் தரு

திருமூர்த்தி தேவர்களில் ஒருமூர்த்தி எந்தனுக்கு
துன்பம் மிகவும்நேருதே பெண்ணேகண்ணே
அடிக்கவார்த்தைகள் மீறுதே (தி

வாணி கந்தார்த்தம்

காதனே நானுரைத்த நல்லமொழி தன்னைதடுத்து
வேதனே போறேனென்று வீண் அகங்காரம் கொண்டீர்
மாதுஎன் வார்த்தைமீறி மன்னவா முன்காலத்தில்
சாதனையாய் கைலைசென்றீர்

தரு

சங்கர தேவரும் கிள்ளினார் சிரசிலொன்றை
பங்கப்பட்டுமே தள்ளினீர்
மங்கையென் வார்த்தைமீறி மன்னவா போகாதீர்
தங்கியே மறுதினம் தயங்காமல் வருவீர (ச

பிரமன் கந்தார்த்தம்

மங்கையே முன்னாளில் நடந்தமர்மமதை சொல்வேன்கேளீர்
சங்கரன் நானென்றெண்ணி சத்திபார்வதி பணிந்ததாலே
அங்கத்தின் உருவம்மாற்ற அமரர்கள் மனம்களிக்க
பங்கையன் சிரசிலொன்றை

தரு

பரமனும் கிள்ளிவிட்டாரே கோபங்கொண்டு
வெறிகொண்டு ஆடிகெட்டாரே
அறிந்திருந்தும வேதத்தை அன்னையே தடுக்கவந்தாய்
சிறந்த கைலைநகர் செல்லுவேன் விடைதந்தாய்

வாணி கவி

விடையது கேட்டநாதா மெல்லிமேல் கோபிக்காதீர்
இடமுடன் முன்னடந்த சேதிகள் தன்னையுரைத்தேன்।
கொடையவா கைலைநகர் கூடியே தேவரோடு
தடையில்லாமல் சென்று சுறுதியாய் வருவீர்தானே

பிரமன் தரு

கைலை நகரைநாடியே பிரமதேவன்
ஒயிலாக தான்நடந்தாரே வேகமாக
தேவர்கள் முனிவர்கூடியே சிவசிவாவென்று
சிந்தைசெய்து ஓடிவாராரே கைலைநகர்

பிரமன் தேவாரம்

திரிபுற தகனாபோற்றி திகழ்மொழி கண்ணாபோற்றி
கரிதனை யுரித்தாய்போற்றி கங்கையை தரித்தாய்போற்றி
கிரியைசிலை கொண்டாய்போற்றி கெங்கா தரனேபோற்றி
எரிமழு தரித்தாய்போற்றி ஏகாம்பரா போற்றிபோற்றி

பரமசிவம் தரு

வந்தனம் செய்கதேவரே சுகமாக நீவாழ்குவாய் (வ
அந்தர முனிவர்தேவர் அனைவற்கு ஆசனம்தந்தேன்
சுருள்] அமருவீர்சிவ அன்பரே நீரும்
ஆசிர்வாதம் புரிந்தேனே வாரும் (வ

பிரமன் தரு

அந்தயே யுன்பாதம் போற்றினேன் திசைமுகதேவன் (அ
அத்ததயே யுனதுபாதம் அருகு மலர்கள சாற்றி
சுருள்] அன்பர்கள்போற்றி பணிந்தோமே தாயே
துன்பத்தை நீக்கி தவிப்பிரே நீயே (அ

பார்வதி தரு

மருகனே பாதம்பணிந்ததால் தேவர்களோடு (ம
கருணை யுடனேயென்றும் காசினி தன்னில்வாழ்வாய்
சுருள்] கலக்கமிலாமலே புலமுடன்வந்த
நலமுள்ள சேதியை நவிலுவீர்சிந்தை (ம

பிரமன் தரு

சூரன்தொல்லையை போக்குவீர் சுந்திரதேவனே (சூ
பாரினில் தேவர்கள் பட்டோமே பெருங்கஷ்டம்
சுருள்] பாவியானசூர பத்மனைக்கொன்று
தேவர்க்கே இன்பம் தருகுவீர் இன்று (சூ

பரமசிவம் விருத்தம்

அன்பர்க்கு அன்பரான அயனெனும் தேவர்களும்
துன்பத்தை தீர்த்துனைவப்பேன் சரஹண பவன்தன்னாலே
பண்ணியே இனங்கொஞ்சு பகல்பொழுது தான்கழிப்பீர்
அன்புடன் நகரம்சென்று அன்புடன் வருவீர்தானே

பிரமன் தரு

தேவர்களே வருவீர் நகரம் செல்வோம் (தே
தேவர்களேவாரும் தாவியே வேகமாக
தேவடிபரமனை துதிசெய்தோம் கோக (தே
கந்தமாத கிரிதன்னிலே நவ வீரர்களோடு (க
கந்திப வேலவனை சேவிக்காமலே கண்டேன்
எந்தனை விடதேவரேனுஎருவோம் மதிக்காமல விணடேன் (க

பிரமன் கவி

தேவரே சொல்வேன்கேளீர் சிவசுப்ர மன்யன்தானும்
தாவியே கந்தகிரியில் தங்கிநவ வீரரோடு
ஏவியே இருப்பதாலே எனக்கவன் சிறுவனதானே
மேவியே மதிக்காமல மறையவன் செலவேன்தானே

ஸ்ரீசுப்ரமணியர் கவி

கந்தபெருமானென்னை கண்டுமே துதிசெய்யாமல்
அந்தமாய் தேவரோடு அதிபதி யாகக்கூடி

வந்திடும் வீரன்நீயார் வகுத்துமே நாமதேயம்
எந்தனுக்கு விபரமாக இயம்பிடும் தேவாநீயே

பிரமன் தரு

கந்தகிரி யமந்த சுந்தர சிவன்மைந்தா
கழறுவேன் வரலாற்றை கேளும் முருகையனே

சுப்ரமணியர் தரு

துதிசெய்யாமல் நின்ற மதியில்லா தேவனே
சொல்லுவாய் உந்தன்பெயர் தேவதேவனே

பிரமன தரு

நான் எந்தன்பெயர் கோருவேன் விபரமாக
திசைமுக பிரமனாகும் முருகையனே

சுப்ரமணியர் தரு

திசைமுகன் யுந்தனுக்கு வசதியான தொழிலென்ன
தெரிய யுரைக்கவேணடும் தேவதேவனே

பிரமன் தரு

தேவர்கள் மூவரில் சிருஷ்டிக்க ஒருமூர்த்தியாகி
ஜீவஜந்துவை படைத்தேன் முருகையனே

சுப்ரமணியர் தரு

படைக்கும் வேதம்யுனக்கு திடமுடன் தெரியுமோ
பகுத்துரை செய்குவாயோ தேவதேவனே

பிரமன் தரு

அண்ணல்சிவ னருளிய எண்ணில்லா வேதமதில்
அதில்கிரி தரிகுவேன்நான் முருகையனே

சுப்ரமணியர் தரு

அரிந்திருக்கு வேதத்தில் கருத்ததை விபரமாய்
அன்பா யுரைக்கவேண்டும் தேவதேவனே

பிரமன் தரு

உரைத்திடுவேன் ஓம்என்றும் உச்சரிக்கும் பிரணவம்சொல்லி
உத்தமவேதம் தனனேமிக முருகையனே

சுப்ரமணியர் தரு

ஓம்என்னும் பிரணவத்திற்கு உரைத்து கருத்துரைய
ஓதுவாய் வேதத்தை பின்னால் தேவதேவனே

பிரமன் கந்தார்த்தம்

ஓம்என்னும் பிரணவத்திற்கு உரைத்துமே கருத்துரையை
ஆம்பலபூத்த சரஹணையில் அவதரித்த முருகன் சொன்னார்
பாம்பின்மேல் பள்ளிகொண்ட பரந்தாமன் என்னசெய்வேன்
தேம்பியே மௌனமாக

தரு

திகைத்து மனதுகுன்றினேன் கருத்துரைக்க
தெரியாமல் மிகநாணினேன்

அகண்ட பரஞ்சுடரே ஆகியே என்றுசெய்வேன்
அவதிகள் நேர்ந்ததே எவரிடத்தில் உய்வேன்

சுப்ரமணியர் கந்தார்த்தம்

என்னடா பிரமாநீதான் இவ்வேதத்திற் குறைதெரியாமல்
பன்னியே ஜீவஜெந்தை படைத்திடுங் கடவுள் என்றாய்
உன்னைநான் விடமாட்டேன் உறையறி விக்காவண்ணம்
சென்னியில் கரத்தால்கொட்டி

தரு

சிறையில் பிடித்துஅடைத்தேன் பிரமாநீயும்
செருக்குக்கொண்டதை கெடுத்தேன்
அமைந்த வேதத்தைதகொண்டு அகிலமதை சிஷ்டித்தேன்
அமரர் முனிவர்தேவர் அவர்களிக்க ரக்ஷித்தேன்

பிரமன் தரு புலம்பல்

ஆனேநான் என்றுசெய்வேன் கரத்தால் சிரசில்கொட்டி
அடைத்தாரே சிறையில்என்னை ஓ தெய்வமே
சிரங்களும் நையுதே சிந்தை மிகக்கலங்கி
சிதறுதே எந்தன்நெஞ்சம் ஓ தெய்வமே
காலில் விலங்குபூட்டி கஷ்டபட என்னைதள்ளி
சட்டியே அடிக்கின்றாரே ஓ தெய்வமே
சிலமாய் பிரணவத்திற்கு தெரியாமல் கருத்துரையு
சிஷ்டையது செய்தாவையோ ஓ தெய்வமே

நாரதர் கவி

வந்ததே மோசம்மோசம் வையமதை தான் படைக்கும்
தந்தையை முருகன்தானு தாக்கினார் சிறையையின்று
குந்தகம் வந்ததிப்பபா குவலயத்தோர்கள் பழிக்க
கந்தனிட பதிக்குசென்று கருத்தை யறிகுவேனே

நாரதர் தரு

வங்ககிரி தன்னில்வாழு சுந்தர முருகையனே
உந்தன்திரு பாதமதில் வந்தனம் புரிந்தேனே

சுப்ரமணியர் தரு

வந்தனம் புரிந்துநிறை வானவர்தொழு மாமுனி
தந்தேன் ஆசிர்வாதம் தாமைருந் தானினி

நாரதர் தரு

ஆசிர்வதித்த சுந்திரா அழகுதிரு கந்தனே
அயனை சிறைபிடித்து அடைத்ததென்ன சுந்திரா

சுப்ரமணியர் தரு

ஓம்என்னும் வேதத்தை உரைக்கருத்து அரியாமல்
தேய்பியே நன்கரிய சிறையடைத்தேன் நெரியாக

நாரதர் கவி

சிறையடைத்து வேதனை சிஷ்டிதொழில் செய்யுகந்தா
கறைகாணு வேதந்தனனை கண்டுநீ யரிந்ததாலே
மறைவேதன மைந்தன் மனமதுமகிட் சிகொண்டேன்
வரைகொண்ட கண்ணன்பதி மாமுனி செல்வேன்தானே

நாரதர் தரு

தந்தையை சிறையிலடைக்கவே கந்தனவர்
தானறிந்து தான்நடந்தாரே வைகுந்தம்
கந்தமாங் கிரிவிட்டுமே மகிட்சியாக
கலகம்செய்ய தான்நடந்தாரே நாரதமுனி

நாரதர் தரு

அண்ட மளந்ததேவனே மணி வண்ணகண்ணு
ஆழியில் துயின்றதேவனே
தொண்டர்கள் துதிசெய்யு திருவடி தன்னில்மிக
தூய நாரதமுனி துதித்து வணங்கின்றேன்

விஷ்ணு தரு

பாதம் பணிந்தநாரதா ஞான மணியேஇனியே
பாரினில வாழ்குவாய் சிரதா
வேதன் மைந்தாரியும் வேண்டிவந்த சேதியை
சிதான் எந்தனுக்கு தெரிசொல்லும் ஓதியே

நாரதர் தரு

தந்தையின் சிறையைநீக்குவீர் மாயாநேயா
குந்தகம்தன்னை போக்குவீர்
அந்தா முனிவர்தேவர் அன்னையு வாடுகின்றாரே
அவர்கள் மனங்களிக்க ஆட்கொள்ளுவீர் தேவா

விஷ்ணு தரு

சிறையைநீக்குவேன் அஞ்சாதே போதிரா
சித்தங்கலங்கி மிஞ்சாதே
திறமுடன அஷ்ட திக்கு தேவர் முனிவர்கூடி
கருத்துடன் வருகின்றார் கலைமைந்தா அமருநாடி

இந்திரன் கவி

தேவரே சொல்வேன்கேளீர் திசைமுக பிரமன்தன்னை
பூவுலகோர் துதிக்கும்கந்தன் பிடித்துமே சிறையடைத்தார்
ஆவலாய் தேவரெல்லாம் அனைவரும ஒன்றாய்கூடி
தாவியே வைகுந்தம் தானுமே செலவோம்தானே

இந்திரன் தரு

பாரதையளந்த காரணதேவா
பாதமதை பணிந்தேன் பரந்தாமா (பா

விஷ்ணு தரு

வந்தனம்செய்த இந்திர தேவா
வந்த விதந்தனைசொல்லும் ஆசிர் வதித்தேனே (வ

இந்திரன் தரு

சொல்லுவேன் சுவாமி சுந்திர லேமி
சுந்திர பிரமன்சிறை நீக்குவீர்தானே

விஷ்ணு தரு

தேவரே கூடி ஆவலாய் நாடி
செல்லுவோம் கைலேநகர் சீக்கிறம் வாரும்

நாரதர் கவி

தாத்தாவே சொல்வேன்கேளீர் தயவுள்ள தேவர்கூடி
பூர்த்தியுள்ள கைலேநகர் பூசுரர் வந்தோம்இப்போ
அத்தி மாலேயணிந்த அரனிட திருவடியை
நேர்த்தியாய் தான்பணிந்து நீக்குவீர் சிறையைதானே

விஷ்ணு தரு

திரிபுரத்தை நகைத்தெரித்த தேவா வந்தனம்
சித்தசனே படைத்தநாதன் சருணம் செய்தேனே

பரமசிவம் தரு

அரவசேஷ ஜயங்கொண்ட ஆதிமூலமே
ஆசீர்வாதமே தந்தேன் அமரும் ஞாலமே

பார்வதி தரு

அண்ணாவுந்தன் திருவடிக்கே அரிவையாளுமே
அன்பாய் துளசிமலரை சாற்றி அடிபணிந்தே

விஷ்ணு தரு

பாதமதை போற்றிசெய்த பாசமுள்ள தங்கையே
பரமனிட பாகமீங்கா பாவை வாழ்குவாய்

நாரதர் தரு

மான்மழுவை காம்பிடித்த மகேஸ்வர தேவா
மாமுனியும் பாதமதை போற்றி பணிந்தேனே

பரமசிவம் தரு

வேதனிட மைந்தனான கீத நாரதா
பாதமதைப் பணிந்ததாலே ஆசீர் தந்தேனே

நாரதர் தரு

சத்தியென்றும் தாயேயுந்தன் சித்தம்மகிழவே
தவமுனி பாதம்போற்றி தான்பணிந்தேனே

பார்வதி தரு

ஆழிமீட்டி ஞானம்பாடும் அருந்தவ முனியே
ஆசீர்வாதமே தந்தேன் அமரும் இனியே

இந்திரன் தரு

சிரமதிலே மதியணிந்த சோதி சிவமே
சுந்திரனும் போற்றிசெய்தேன் திருவடிதன்னில்

பரமசிவம் தரு

பொன்னுலகம் தன்னையாளும் மன்னனேவாழி
பன்னும்சேதி வந்தவிதம் பகரும் நீயோதி

இந்திரன் தரு

துஷ்டருக்கு சிஷ்டைசெய்யும் சுந்திர தாயே
திருவடியில் மலரைசாற்றி நாள்பணிந்தேனே

பார்வதி தரு

அமராபதி தன்னையாளும் அமரர்க் கதிபதியே
அமருவாயே ஆசிர்வாதம் அரிவை தந்தேனே

விஷ்ணு கவி

மதிதனை சிரபணிந்த மைத்துனா சொல்வேன்கேளு
சதுர்முகனை பிரணவம்கேட்க சண்முக பெருமான்தானு
திகரியே மயங்கவேதன் சிறைதனில் பிடித்தடைத்தார்
பதியுளோர் துதிக்குவண்ணம் பங்கையன் சிறைநீக்குவீரே

பரமசிவம் தரு

செல்லுவோம் வாரீர் கந்தன் பதியைநாடி
செல்லுவோம் வாருங்கள் தேவர் யாவரும் கூடி
தொல்மறை வேதன்சிறை நீக்கவே நாடி

விஷ்ணு தரு

மைத்துனா வந்தோம் தேவர்கள்யாவரும்
மைத்துனா வந்தோமே மதிமுருகனை காண
சித்தர் த்தரெல்லாம் இயங்குறூர் பதில்தோண

சுப்ரமணியர் கவி

தந்தையாரே யுங்கள் தாளடி போற்றிசெய்தேன்
சுந்திர மாமாயுந்தன சேவடி தனில்பணிந்தேன்
இந்திரர் நாரதர் இனியதேவர்க்கு சரணம்செய்தேன்
சிந்தையு மகிழ்வாக சிம்மாதனத்தி லமருவீரே

பரமசிவம் தரு

கந்தன் பெருமானை பாலா நீயும்
கண்டு அரியாமல் சிலா
சுந்திர பிரமனை சிறைதனி லடைத்தாயே
சந்தோஷ மாய்விடு சரஹண மூர்த்தியே

சுப்ரமணியர் தரு

பிரணவத்திற்கு பொருள்தெரியா பிரமன்
பூதலத்தை சிருஷ்டிக்க தெரியா
சிறையி லடைத்தேனென்று சிந்தை கலங்காதீர்
அறைகுவீரே பதில் அயன்சிறை நீக்குவேன்

பரமசிவம் தரு

அயன்சிறை நீக்குவாய்கந்தா பின்னால்
அரிவிப்பேனே பதில் மைந்தா

திடியங்கிய வேதனை சிறைமீட்டு பதில்சேதி
தயக்காமலே பேசி தங்கலாமே யோதி

சுப்ரமணியர் தரு

பிரமன் சிறைநீக்கினேன் தந்தை மனம்
புண்ணாய் கலங்காதீர் சிந்தை
மறைவேத சிக்ஷிப்பு மௌன வேதத்தை தந்தேன்
சுரர் முனிவரெல்லாம் சிந்தை மகிழும்கந்தன்

பிரமன் கவி

சோதியும் சுடராய்நின்ற சுந்திர சிவனையுந்தன்
பாதமே போற்றிசெய்தேன் பாலனை கார்த்திகேயரே

பரமசிவம் கவி

வேதனே வாழி வாழி விண்ணவர் களிக்கநீயும்
நாதனும் சிறையைமீட்டேன் நான்முகா அமருவாயே

பார்வதி தரு

பாலாஎந்தன் சிலனே பார்புகழும் மைந்தனே
ஆலமுண்டோன் மைந்தனே அமரும்மடியில் கந்தனே

சுப்ரமணியர் தரு

அன்னையாளேயோடி வந்தேனே • அமர்ந்தேன்மடியில் கந்தனே
பன்னியே என்றுவேதம் பகரபோறீர் என்தாயே

பரமசிவம் தரு

பிரணவ பொருள்தன்னையே பிசகில்லாமல் முன்னையே
சரஹண பவனேநீயும் சாற்றிடுவாய் பன்னியே

சுப்ரமணியர் தரு

முன்னாளிலே அன்னைக்குமொழிந்தீர் பிரணவம் கன்னிக்கு
அன்னாளிலே வண்டாக அறிந்தேன் கருத்தை பன்னியே

பார்வதி தரு

அறிந்தவேதப் செல்வனே அன்பாயுரைத்தால் புதல்வனே
தெரிந்துமே அதன்கருத்தை சிந்தைமகிழ்வோம் செல்வனே

சுப்ரமணியர் கவி

அன்புள்ள தந்தைதாயே அறிவிப்பேன் வேதம்தன்னை
என்னிட சிம்மாதனவிட்டு இறங்கிகைகட்டி வாயபுதைத்து
மன்னியே நிற்பிராகில மர்மமுள்ள பிரணவத்தை
பன்னுவேன் கருத்ததை பாசமுள்ள தந்தைதாயே

பரமன் வசனம்

கந்தபெருமானே நீசொன்ன கட்டளைபடி இருவரும் கைகட்டி வாய்பொற்றி நின்றோம் வேதம்சொலலும் கந்தனே

சுப்ரமணியர் வசனம்

தந்தைதாயே தங்கள் இருவரிட செவியில் ரகசியமான ஓம் என்னும் வேதபொருளை பலரும் அறியாவண்ணம் சொன்னேன் நான் செய்த குற்றத்தை மன்னிப்பீர் தந்தையே

பரமசிவம் கவி

கருணைகூர் முருகாபுத்தன் கட்டளை படியேயின்றம்
மருமொழி பிரணவ கருத்தைமர்ம மில்லாமல்சொன்னாய்
குருநாதன் என்றுநாமம் கூறினேன் தேவர்கள்புகழ
ஒருமையாய் கந்தகிரியில் உத்தமா அமருவாயே

பொது வசனம்

கந்த பெருமானுக்கு பரமன் சிவகுருநாதன் என்று திருநாமமிட்டு ஆசீர்வதித்து பரமன் கைலைசெல்ல கந்தபெருமான் நவ வீரர்களோடு கந்தகிரியில் இருக்கின்றபோது கிரவுஞ்சகிரியில் வாசமாகிய தாருகாசூரன் தேவர்களை சிறைபிடிக்க கொலுவாக வருகிற விதம் காண்க

தாருகாசூரன் வருகிற கவி

பாரினில் புகழ்படைத்த வல்லதீரன்
பதினாலு யுலகமும்புகழ் பெம்பிரான்
பேருனகிரவுஞ்ச கிரியையாளும் சூரன்
பிலமுள்ள தாள படையைகூட்டி
காரிடிபோல் பேரிடமாரம் முழக்கை
கபடமுள்ள தேவர்களை சிறைபிடிக்க
தாரணியில கண்டவர் திடுக்கிட்டஞ்ச
தாருகா சூரனும் வருகின்றேனே

தாருகாசூரன் வருகிற தரு

கிறவுஞ்ச கிரிதன்னை யாள்பவனும் பலம்மிகுந்த
கெடிவீர தாருகாசூரன் வந்தனே
அரனு அயன்மால் திடுக்கிட்டஞ்சிட
அவுண சேனைகள் வந்து வணங்கிட
ஆதிசேஷனும் யுடல்நெளிந்திட
ஆதித்தனும் கதியொளிந்திட (கி
மந்திரி மார்கள்பக்கம் சூழ்ந்திடவே வேடிக்கையாக
மதியானதேவி யரிகில்தாழ்ந்திடவே
மணிமகுடம் சிரசில் துலங்கிட
மாதர்கள் கவரி வீசிதுலங்கிட
மறகதப்பணி மார்யிலங்கிட
மாதவ முனிவர்கள் ஆசீர் வழங்கிட (கி
கரத்தில் தோமரம் வாளும்தாங்கியே நிகரில்லா
கத்திவாளும் அடித்துஓங்கியே
காரிடிபோல் முரசுபாடிட
கலகலென் றுமே கீதமொலித்திட
கடிகிமந்திரி நீதிகூறிட
கருத்தாய் தூதர் வந்து வணங்கிட (கி

தாருகாசூரன் கவி

ஆரடா காவல்காரர்க்கு அதிபதியான வீரா
சீரடா நாமும்இன்று சிறைபிடித்து தேவர்தன்னை
பேரடா வருகவேண்டும் பலமுள்ள ரதத்திலேறி
நேரடா சேனையோடு நீங்களு வருகுவீரே

தாருகாசூரன் தரு

அண்டபுவனம் கிடுகிடென்ன ரதத்தில் ஏறியே
ஆர்பறித்து சேனையெல்லாம் வருவீர் சீரியே
விண்டத்து தேவரெல்லாம் கண்டுவாடவே
வேகமாக ரதம்நடத்தி வெகுண்டுவருகிறுன்
சிகசமுகாயாளிசூரர் சேர்ந்து நில்லுங்கள்
சிறப்புள்ள தேவர்தன்னை சிறைபிடியுங்கள்
வைகுந்தம் தன்னிலவந்து கண்டோம் கன்னனை
வாதுபேசி சமர்புரிந்து வருவோம் வண்ணனை (அ

தாருகாசூரன் கந்தார்த்தம்

என்னுடா கண்ணுநீயும் எந்தனை மதித்திடாமல்
பன்னக ஜயனம்மீது படுத்துமே கொண்டாய் இன்று
உனைநான் விடவுமாட்டேன் ஓடிநீ மறைந்தபோது
சென்னிற சிம்மாஸனத்தை விட்டு

தரு

தேவனே வாராய் சமர்செய்ய
தியங்காமல் நேராய்
தேவனெனபட்டம் செல்லாது இனி வாராய்
மூவர் தேவர்களை ஆவியை ஒழிப்பேன் பாராய் (தே

விஷ்ணு கந்தார்த்தம்

பாராண்ட பலியைவிட பராக்கிரம சூரனேநீயும்
நாரணன் எந்தன்பாதம் நமஸ்காரம் செய்திடாமல்
காரணன் அநேகம்சூழ்ந்து கபடமாய் பேசவந்தாய்
வாரணன் தன்னைகார்த்த

தரு

வண்ணனும் வந்தேன் சமர்செய்ய
கண்ணனும் வந்தேன்
கொண்டல்மேனியன் கோறிநீ மதிக்காமல்
விண்டு பலமொழிகள் உறைக்காயே துதிக்காமல்

தாருகாசூரன் தரு

துதிக்கும் புலகக்கண்ணனே உந்தனை நான்
சிதைக்குறேன்பார் வண்ணனே
மதிகெட்டு பேசுருப் பகாபல சாலிஎன்று
சுருள்] மாறியேவில்லை சீறியே வளைத்தேன்
சாறியாய் பாணத்தை கோரியே தொடுத்தேன் (து

விஷ்ணு தரு

தொடுத்த கணையை தடுத்தேன் அட்டசூரா
அடித்தபாணத்தை ஒடித்தேன்
கடுத்த சராசரம் கடல்களும் ததிம்பிட
சுருள்] காரிடிபாணம் கக்கி அக்கினிசொரி
நீயிபோ விட்டேனே மேதினி போற்றுஹரி(தொ

தாருகாசூரன் தரு

சூரியாலு கண்ணனே நில்லடா உந்தன்வீரம்
தெரியும் செல்லாது மல்லடா
கரிகிட வருண அஸ்திரம் கரமதி லெடுத்தேனே
சுருள்] கண்ணனே கண்டு நீ அண்டத்தில் மறையாதே
தெண்டம்செய் என்பாதம் விண்டேனே தெரியாதா (ஹ

விஷ்ணு தரு

தெறிய இரணியன் தன்னையே நரசிங்கமாய்
ஹரியும் கொன்றேன் முன்னையே
பறிய அவனைவிட டலங்கொண்ட வீரனே நீ
சுருள்] பாரடா சக்கரம் கரமதில் தொட்டேன்
விறிட்டு வருகுது விமலனும் விட்டேன் (தெ

தாருகாசூரன் கந்தார்த்தம்

விட்டனர்திருமாலு சக்கரத்தை விரிட்டுவருவதை சூரன்கண்டு
சட்டமாய் சேனையெல்லாம் சீரியே மடியுமென்று
கெட்டியாய் பரமன்தந்த கெடிவீர வேல்தனை யெடுத்து
வட்டமில் தனைவளைத்து

தரு

வாதுபேசியே விடுத்தேன் சக்கரத்தை
சோதுபடவே தடுத்தேன்
ஆதிசிவன்வரம அழியாமல் பெருகிட
சுருள்] ஹரியின் சக்கரம் முறிபட கரிகியே
செரியுடன் நின்றிட நேர்பட உருகியே (வா

விஷ்ணு கந்தார்த்தம்

உருகியே சக்கரந்தானு ஒளியது தான்மழுங்கி
திருகியே அமறுபொதியில் தேடிவந் தடைந்ததாலே
பெருமூர்த்தி சிவன்வரம் மிசகிடா தென்றுஎண்ணி
ஒருமூர்த்தி கண்ணன்

தரு

உற்றுயோசனை செய்தனர் சூரனிட
சித்துமாய்கை யறிந்தனர்
பத்திசூரனிடம் சண்டை பலமுடன் செய்யாமல்
மற்புய ஆகாயத்தில் மறைந்தனர் உய்யாமல் (உ

தாருகாசூரன் சளி

உய்யாமல் கண்ணன் உளவதை தானறிந்து
செய்யாழி கண்ணன் திடமென்று மறைந்தார்பிக்க
துய்யவே வைகுந்தம் சூரன் எனக்கடக்கம்
அய்யமில்லா பிரமனிடம் அமரது செய்வேன்தானே

தாருகாசூரன் பிரமனைக்கண்டு சொல்வது கந்தார்த்தம்

அமரர் முனிவர்க்கெல்லாம் அதிபதி யாகவந்த
விமலனென்று பேர்படைத்த வேதனே கேளடாநீ
சுமதியாய் எந்தனிட திருவடியை பணிந்திடாமல்
கமல வாணியோடு வீற்றிருந்தாய்

தரு

காறண வேதனேவாடா எனதுபாதம்
கோறியே பணிவாய்கேடா
வாரணன் தன்னைகார்த்த வாசன் வைகுந்தம்
பூரணமாய் இன்று போச்சே எனக்குசொந்தம

பிரமன் கந்தார்த்தம்

சொந்தமென்று வைகுந்தம் சூக்ஷமாக பேசவந்த
அந்தமில்லா ராக்ஷத அரக்கனே கேளடாநீ
உந்தனிட பாதந்தன்னை உத்தமன் பணியமாட்டேன்
எந்தனிட திருவடியை

தரு

இன்று பணிவாய்சூரனே கெதியே என்று
பன்னும்மொழி வீரனே
உன்னை படைத்தபிரமன உத்தமன் நானேகண்டாய்
அன்ன வாகனனென்று அகிலம்போற்று' விண்டாய் (இ

தாருகாசூரன தரு

விண்டமொழிகளை சண்டேன்யுந்திரம் வேதனே
உண்டோயுந்திரம் என்னிடம செல்லாது யோதனே
உரியவே வில்லதை வளைத்தேனே
உக்கரமாய் பாணத்தை தொடுத்தேனே
உறுகதாபதிபம் கொடுத்தேனே
ஒருகோடி பாணத்தை விடுத்தேனே (வி

பிரமன் தரு

விடுத்த பாணத்தை தடுத்தேன் பாரடா சூரனே
வெறுங்கள மாக்குறேன் யுந்தன் சேனையை தீரனே
வேத னென்றுநீ யறியாமல்
விட்டாய் பாணத்தை தெரியாமல்
வீறிட நாகஅஸ்திரம் சாரிசாரியாக
விடுத்தேனே கணைகளை வாரிவாரியே (வி

தாருகாசூரன் தரு

வாரிவிடுத்தாக அஸ்திரம்தன்னை மறையோனே
வருவதைகண்டு உருகி மனதுவாடி நெறியோனே
வல்லமை கருட அஸ்திரம் தன்னையே
வாதுபேசி இதோ பன்னியே
வருவித்தேன் கணைகளை யுன்னியே
வாட்டினேன் தேவர்களை மன்னியே (வா

பிரமன் தரு

மன்னியே கெருட அஸ்திரத்தைவெட்டி தள்ளியே
மாராமல் சண்டை தீரனும்செய்தேன் துள்ளியே
மண்டலமும் விண்டலமும் நடுங்கவே
மாறி அக்கினிகணை சீறியே
மறுத்துமே விட்டேன் வாரியே
மன்னிபாதம் பணிவாய் கோரியே (மா

தாருகாசூரன் கந்தார்த்தம்

கோரிய வேதத்தைகொண்டு குவலயம் படைக்கும்பிரமன்
வாரியே அக்கினிகணையை வலுவாக விட்டதாலே
சீறியே சேனையெல்லாம திடீரென்று மடிந்தாரையோ
பாரிய பருவத அஸ்திரம்

தரு

பற்றி கரத்திலெடுத்தேன் கோபங்கொண்டு
பதரி வேகமாய் தொடுத்தேன்
வெற்றி அடையாமல்வேதன் விட்டு சத்தியலோகத்தை
சுருள்] வீரிட சென்றான் பாரிலோர் பன்ன
சீரிட இந்திரன் பதிசெல்ல இன்னாள் (ப

தாருகாசூரன் இந்திரனை கண்டு சொல்வது கந்தார்த்தம்

என்னடா இந்திரா நீதான் எந்தனை தானும்கண்டு
பன்னியே எந்தனிட பாதத்தை பணிந்திடாமல்
மன்னன்போல் வீற்றிருக்காய் மகாபல சாலிநீயோ
சென்னிற சிம்மாதனத்தி லேறி

தரு

சிதறியே அடித்தேன் இந்திரனுன்னை
கதறவே பிடித்தேன்
பதரி தேவர்களெல்லாம் பயந்து யோடிநிற்க
சுருள்] பளுவான சிலையதை கரமதில் எடுத்தேன்
பற்றியே தேவரை வாரியே அடித்தேன் (சி

இந்திரன் கந்தார்த்தம்

அகங்காரம் கொண்டசூரா அடிதனை பணியுமென்றாய்
பகவானு யுந்தனிட பாதத்தை தேவர்கள் பணிய

இகபரம் இரண்டுக்கும் ஏகனே ஈசன்கர்த்தன்
வகையதை யறிந்திடாமல்

தரு

வந்துவினும் எதிர்த்தாய் சூரனீயும்
பந்துபோலவே குதித்தாய்
சிந்தை கலங்கதேவர் சிறைதனை பிடிக்கவந்தாய்
சுருள்] தீரனை யுந்தன் வீரம்செல்லாது
தீரனும் எதிர்த்தேன் கோபம்பொல்லாது (வ

தாருகாசூரன் தரு சிந்து

அண்டர்கோனே கேளடா உந்தனிட
அகங்காரம் தன்னை அழிப்பேன் காணடா
கொண்டேன் கரத்தில்வில்லை சாசரவென்று
கொக்கரித்து தேவர்கள் திக்கதிகைக்க
பிண்டிபாலா எடுத்தேனை கோபங்கொண்டு
பிடித்துமே தேவர்களை கட்டிஅடித்தேன்

இந்திரன் தரு சிந்து

என்னுடா தாருகா சூரா கொவங்கொண்டு
ஏவியே சேனைகளை கட்டி அடித்தாய்
சின்னபின்னம் செய்குறேனென்பார் உந்தனிட
சிரங்களு சரங்களும் கொய்திடவே
பன்னியே அக்கினிகணை தனையெடுத்து
பதறிய வேகமாய தொடுத்தேன் வேண (எ

தாருகாசூரன் தரு சிந்து

தண்டம்தனை எடுத்தலங்கி தூள்பறக்க
தாவியே தூள்பறக்க அடித்தேனே தாங்கி
கண்துண்ட மாய்விழவே குடல்சரிந்து
கர்சித்து சத்தம்போட்டு தானழவே
குண்டலத்து தேவரெல்லாம் மதியும்கெட்டு
கோறியே தேவனிடம் முறையுமிட (த

இந்திரன் தரு சிந்து

முறையிட்ட தேவர்களை தான்பிடித்து
மூர்கனே செல்லவும் காயமேதடா
கறைகாணு வெள்ளம்போன்ற சேனைகளை
கண்டித்தேன் சிரம்விழ பொடிபடவே
அறைநாழி குள்ளாக உந்தனைபின்னு
அனுப்புவேன் நமன்பதி துள்ளியே போக (மு

தாருகாசூரன் பந்தார்த்தம்

என்னுடா தேவாநீதான் இருமாப்பு தானுகொண்டு
பன்னியே எந்தனிட படைகளை தான்மடித்தாய்

உன்னை நான் விடவேமாட்டேன் உம்பர்கள் துணைவந்தாலும்
மன்னியே வில்வளைத்து

தரு

மாறிமாறியே விடுத்தேன் சரங்களை
சாரிசாரியாய் தொடுத்தேன்
சீறியே அக்கினிகணை சேனைகளை மடிக்க
சுருள்] திகைக்கவே இந்திரன் தன்னையே பிடித்து
அகலாமல் ரதத்தில் கட்டினேன் துழத்து

இந்திரன் தரு புலம்பல்

தீரன் தாருகாசூரன் தேவன் என்னைபிடித்து
சிறைகொண்டு போரானையோ சங்கரனே
வீறிய தேவரெல்லாம் வெளிபடுவ தெந்தகாலம்
விமலனே என்னசெய்வேன் சங்கரனே

தாருகாசூரன் கவி

மந்திரி மாரேகேளீர் மாபெரு தேவரோடு
இந்திரன் தனைபிடித்து இரமதில் தானுவைத்து
சுந்திர கிரவுஞ்சகிரி சீக்கிரம் வந்துசேர்ந்தோம்
அந்தமாய் காவல்புரிந்து அன்புடன் இருப்பீர்தானே

விஷ்ணு கவி

கூற்றனை தானுரைத்த கோதிலா ஞானதேவர்
நற்றிசைபுகழ் இந்திரனை நாடியே தாருகாசூரன்
மாற்றியே சிறைபிடித்து மயேந்திர கிரிக்குசென்றான்
சாற்றியே சிறைமீட்க சாமளன பணிந்தேன்தானே

பரமசிவம் கவி

சரஹணை தனிலுதித்த சண்முகபெரு மானேகேளும்
வரம்பெற்ற தாருகன் வலுவுள்ள சூரபத்மன்வந்து
சிறப்புள்ள தேவரை சிறையதா தான்பிடித்தான்
மரபுள்ள சூரர்களை வதைத்துநீ வருவாய்தானே

சுப்ரமணியர் கவி

அசுரரை தான்வதைக்க அய்யனே பெரிதாசொன்னீர்
வசதியாய் சூரர்தன்னை வெற்றினை பெற்றுவாறேன்
இசைபுகழ் நவவீர சேனைகள தன்னைகூட்டி
இசையுடன் சென்றுவாறேன் எனக்குவிடை தாரும்தானே

பார்வதி தரு

உத்தம கண்மணியே பாலா நல்ல
உம்பர்கள் துயர்நீக்க சீலா
சத்திவேல் தந்தேனே சங்கரிக்க சூரரை
சித்தம் மகிழ்ச்சியாய் வெற்றிபெரு தீரரை

சுப்ரமணியர் தரு

சத்திவேல் கொடுத்த அன்னையே உந்தன்
தாளடி துதிசெய்தேன் பன்னியே
எத்திசை யுலகோர் இதர்க்குநிக ரில்லை
வெத்திகொண்டு சூரரை வென்றிடவே நல்ல

பரமசிவம் தரு

இரண்டாயிரம் வெள்ளம்கணங்களை கந்தா
எழில்படையாய் தந்தேன் இனங்களை
அரவநந்தி உக்ரன் அக்கினி கண்ணன்சிங்கன்
திரங்கொண்ட படையோடு சென்றுவாறு சங்கன்

விஷ்ணு தரு

மாய்கையில் மிருந்த சூரரை கண்டு
பயங்கி தியங்காமல் தீரரை
ஆய்வில்லா சூரரை அலக்ஷிய மாய்கொல்ல
அக்கினி கணைகளை அன்பாய் தந்தேன்வெல்ல

சுப்ரமணியர் கவி

வீரபாகு தேவனே தம்பி விளங்கிடு சேனையோரே
நாரத முனியேசுவாமி நல்லதோர் ரதத்தின்மீது
காரண பிண்டிவில் கெளதகோமரம் வாளுடன்
தீரமாய் ரதத்திலேறி செல்லுவோம் வருவீர் தானே

சுப்ரமணியர் தரு ரதம் ஏருவது

தேரின்மீது ஏறினர் சிவசுப்ர மணியர்
தேரின்மீது ஏறினர்
தேரின்மேல் ஏறினர் தேவர் துயர்தீர்க்க
பாரியே தேவர்கள் மலரதை சொரிந்திட (தே
காரிடி முறசுபேரிகை முழங்கிட
கனதம் மல்லரிபூரி கதிக்கவே கொட்டிட
கணபூத படைகள் கடிகிமுன்னல் எட (தே
நாரத முனிவர் வீரபாகு தேவர்
காரண சூரன்செய்தி கருத்தை யுரைத்திட
தீரமாய் கிரவுஞ்ச கிரிதனை கண்டிட (தே

சுப்ரமணியர் கவி

கிரவுஞ்ச கிரிக்குவந்தோம் கெடியபெரும் தாருகன்கோட்டை
நரைதிரை நீக்கிநின்ற நாரத முனியேசென்று
திரமுள்ள தாருகனிடம் சேதிகள் தானுரைத்து
விரைவினில் தான்வருவீர் வேலவனுரைத்திட்டேனே

தாருகாசூரன் தரு

வாருங்கான் நாரத முனியே சூரன்கோட்டை
வந்தேன் சொல்லுவீர் தனியே

ஆறுமுகன் உத்தனை அனுப்பினார்கள் தூது
ஒருள்ள திருவடியே சூரன்டனிங்தேன் ஓது (வா

நாரதர் தரு

ஓ ஓவேன் தாருகா சூரனே நான்
ஓடிவந்த சேதியை கூறனே
தீதாக தேவரை சிறையடைத்தாய் வாட்டி
வாதாக வேலவன் வந்தார் வல்லர்களைக் கூட்டி (ஓ

தாருகாசூரன் தரு

வடிவேலன் என்றாய் புதுமையே அவன்
வரலாற்றை சொல்லுவாய் இனிமையே
செடிபெறச் சேனையை கீர்த்தியாய் கூட்டியே
மடிக்குறேன் கந்தனை மயங்காமல் வாட்டியே (வ

நாரதர் தரு

பரமசிவனிட மைந்தனும் சரவணையில்
பற்றி யுதித்திட்ட கந்தனும்
அரனையன்மால் இந்திரன் அவருக்கு நிகரில்லை
சிறைவிட்டு தேவரை சிறப்பாய்வாழ்வீர் தொல்லை (ப

தாருகாசூரன் கந்தார்த்தம்

அப்பதை தானுரைக்க தூதாய்வந்த முனியேகேளீர்
அப்புமா மதியணிந்த ஆண்டவன் மைந்தன் தன்னை
இப்பவே சமன்பதிக்கனுப்ப என்னிட படையைகூட்டி
கப்பியே ரதத்திலேறி

தரு

கரத்தில் வில்லையெடுத்தேன் அஸ்திரம்தன்னை
கணக்கில்லாமல் தொடுத்தேன்
அரனிட மைந்தன்மீது அஸ்திரங்கள் தான்எட்ட
சுருள்] ஆட்டினேனே கணை பூட்டினேனே
வாட்டினேனே சேனையை ஓட்டினேனே (க

சுப்ரமணியர் கந்தார்த்தம்

வாட்டிட சேனைகள்தன்னை வல்லமை தாருகாசூரன்
கூட்டியே அணிகளோடு கொக்கரித்து வருவதைகண்டு
ஓட்டியே ரதம்திருப்பி உம்பர்கள் தான்மகிழ
ஆட்டியே வில்வளைத்து

தரு

அஸ்திரம் தன்னை தொடுத்தேன் சிங்கமுக
அநேக பாணயவிடுத்தேன்
கஸ்திபட்டு சேனைகள் கலங்கி துடித்துவாட
சுருள்] காகாவென்று சங்கஞம் பெருகிட
சிரமது அறுபட்டு சேனைகள் உருகிட (அ

தாருகாசூரன் தரு

சேனைகள்தன்னை வீணாகமடித்தாய் வேலனே
சித்திபெரும்பாணம் அத்தனையும் கெடுத்தாய் காலனே
சிதறிட அக்கினிகணை எடுத்தேனே
சீறியே கணைகளை தொடுத்தேனே
சிவகணங்கள் வாடி துடிக்கவே
சீவணைவிட்டு சிலரை மடிக்கவே (சே

சுப்ரமணியர் தரு

மடிந்தசேனைகள் துடித்து எழுந்ததே சூரனே
மன்னித்து தேவரை மயங்காமல் சிறைவிடு தீரனே
மாளாத சேனைகளை கண்டேனே
மாறாத கோபமது கொண்டேனே
மண்ணில் சேனைகள்விழ துண்டனே
மதித்து அஸ்திரம்விட்டு கொன்றேனே

தாருகாசூரன் தரு

கொன்றைமாலை யணிந்த கோரியசிவன் மைந்தனே
கோமான் தேவரைகொல்லாமல் விடுவேனோ கந்தனே
கொடுங்கணை எடுத்தேன் தாவியே
கொக்கரிக்க உக்கரமுடன் தாவியே
கோரங்கொண்டு கணைகள் மேவியே
கோறியசேனை மடித்தேன ஆவியே (கொ

சுப்ரமணியர் தரு

ஆவிய இழுந்ததாவிய நவ வீரரும்
அவரைவெல்ல முடியாது யுன்னால் தீரரும்
ஆலகாலம்போல் சீறியே
அஸ்திரங்களை விட்டேன் வாரியே
அரக்கன் சேனைகள்எல்லாம் சீறியே
அறுந்து சிரம்விழவே மீறியே (ஆ

தாருகாசூரன கந்தார்த்தம்

எத்தனையோ மன்னரோடு எதிர்த்துனன் சண்டைசெய்தேன்
வெற்றியில் சமரில்வெல்ல வேலன்போல் கண்டதில்லை
சித்திபெற கண்கொண்ட சேனைகளை மடித்துவிட்டான்
மத்தா லடிபட்ட தயிர்போ லுடைந்து

மல்லுயுத்தம் செய்யயெதிர்த்தேன் நவவீரரை
கொல்லுவேனென்றுவந்து குதித்தேன்
தொல்லை புவனமும் எல்லைக ளதிரவே
துடித்து புஜம்தட்டி மடக்கி காலைநீட்டி
துள்ளிய சேனைகளை தள்ளி யதிரகெட்டி
துரித முடனேவாரி நெரியுடனே யடித்தேன்

துங்கன் வீரபாகு மங்கி மனம்கலங்க
அடித்து எதிர்த்தகணம் சிதறி மடிந்திட
துண்டுவீரர்வாட சிவன்மைந்தன் கண்டுவோட

சுப்ரமணியர் கந்தார்த்தம்

வாடியசுவவீர ரோடுசூரன் மல்லுத்தம் செய்யும்போது
காடியே யகேக வீரர் சமன்பதி தன்னைசேர
தேடியே வீரர்வாட தெரிந்துமே வேலன்தானும்
சாடிட தாயார்தந்த

தரு

சத்திவேல் கையில்எடுத்தேன் தேவர்களிக்க
சித்திபெறவே விடுத்தேன்
அத்திசிவன் மாலயன் சித்தம் மிககலங்க
அடித்து துடித்தசூரன் நடித்து துடித்திட
அக்கினி பொறிசிதறி திக்கெலாம்பரவிண்டு
அரக்கனை தான்மடித்து அலைகடலில் மொழிகி
அன்பாய் வேலவனிடம் அடைந்த சத்திவேலு (ச

சுப்ரமணியர் கவி

நவவீர சேனையோரே நாரத முனியேகேளீர்
தவஞ்செய்து வரம்பெற்ற தாருகனை தான்மடித்தேன்
பவகிற வுஞ்சைவிட்டு பட்டணம் மயேந்திரகிரி
அ ணிபுகழ் சூரபத்ம அரக்கனை வெல்வோர்தானே

பொது வசனம்

இவ்வித மாகத்தானே தாருகாசூரனை வேலவர் சம்மாரம் செய்து சேனைகளை கூட்டி கிரவுஞ்ச கிரியைவிட்டு வீரமயேந்திர கிரி வருகும்போது சூரபத்மன் தர்பார்.

சூரபத்மன் வருகிற கவி

வீர மயேந்திரகிரி பட்டணம் யாளும்தீரன்
வெகுவீர தளபடை சூழ் கெம்பீரன்
தீரமுள்ள மைந்தன் பானுகோபன் யாளிமுக்கன்
திடமுள்ள இரணியன் வச்சிரவாகு சூரன்தாழ
பாரமுள்ள மணிமுடி யலங்கரித்து புஜங்கள்தட்டி
பருகிரம மந்திரியும் தந்திரங்கள் தானுரைக்க
காரிடிபோல் முரசடங்சா வாத்தியம் டமாரம்போட
கர்சித்து சூரபத்மன் கொலுவாக வருகின்றானே

சூரபத்மன் தரு

தீரன் சூரபத்மன் வந்தனனே சூராதிசூரன் (தீ
தீரன் சூரபத்மன் வந்தேன்வீர வீரவீரர்கள் வந்து வணங்கிட
காரிடிபோல் முரசுபேரிகை கனத்தமல்லரி கொட்டிவழங்கிட
சுருள்] கண்டிமோந்தர்கள் அண்டம் ஒளித்திட
தெண்டம்செய்துமே சூரர் துதித்திட (தீ

மணிமகுடம் பளபளன்றிடவே மேருவைபோன்ற
மார்பகண்டபுஜம் துன்னிடவே
கணிகைமாதர்கள் கவரிவீசிட
கட்டழகியர் ஆலம் ஏந்திட
அணிஅணியாய் சேனை நெருங்கிட
அதிவீரர்கள் வந்துவணங்கிட
அகந்தையானைமேல் அம்பாரி கொண்டுமே
அவுணசேனைகள் வணங்ககண்டுமே (தீ
வீரமயேந்திரி யாளும்தீரனும் லட்சம்யோசனை
விளங்கும் கோட்டைகதிபதி சூரனும்
நாரணன் தேவர்கள் கண்டுமே
நடுநடுங்கி மனது விண்டுமே
கோரதந்த வச்சிர சூரனும்
கோரிவந்துமே சிரம்வணங்கிட
கொத்தலங்களை வெற்றிபெற்றிடும்
சுத்தவீரர்கள் நத்திபோற்றிட (தீ

சூரபத்மன் கவி

அண்டமே ஆயிரத்தெட்டு அதிலுள்ள பேர்களெல்லாம்
எண்டிசை பதினாலுலகம் எல்லா நிசை எனக்கடக்கம்
கண்டுமே வானவர்முனிவர் கைகட்டி பதிலுரைக்க
மண்டல கோட்டைவாசல் காற்குமாருத காவலது செய்வாய்
[தானே

சுப்ரமணியர் கவி

தந்திரமுள்ள நாரத தவமுனியே சொல்வேன்கேளீர்
அந்தர தேவர்கள் அடைத்துவைத்த சூரபத்மனிடம்
விந்தையாய் தூதனாக விரைவியே சேதிதன்னை
சிந்தையு மகிழ்ச்சியாக சேதியறிந்து வருவாய்தானே

சூரபத்மன் தரு

வாரும் நாரதமுனி நீரும் எந்தனைநாடி
கோரிவந்ததை சொல்லுமே
காரும்பாதம் பணிந்தேன் கலகபுரி நாரதா
ஆரும் எதிரியுண்டோ அதிபனேயுரை நீதனே (வா

நாரதர் தரு

சூரா பாதம் பணிந்ததீரா எந்தனாளும்
வீரா நீ வாழ்ந்திருப்பாயே
காரண கர்த்தனான கடவுள் சிவனைமைந்தன்
ஆறுமுக வேலன அரக்கரை மடிக்கவந்தான் (சூ

சூரபத்மன் தரு

மட்டி பிரமதேவனை கொட்டி சிறையடைத்த
கெட்டிகாரன் என்றறியாமோ

கிட்டி அவனை இன்று வெட்டி நமன்பதிக்கு
அட்டி இல்லாமல் சேர்க்க எட்டி படைகூட்டுவேன்

தூதர் தரு

தீரன் தாருகாசூரன் தனை மடித்து
கோரம்யுந்தன் மேல் கொண்டுமே
ஆறவசற மாய் சேனை அணி அணியாகக் கூட்டி
அமர்செய்யவர் தானே சமரில் வல்லவனும் (தீ

சூரபத்மன் கவி

என்னிடதம்பி தாருகனை இன்று மடித்த பாவி தன்னை
குந்தகம் செய்ய வேண்டும் கோமானை சிறைவிட பாட்டேன்
தந்திர முனியேசென்று சமர்செய்ய மாவே சொல்லும்
பந்தமாய் எனது மைந்தன் பானுகோபனை யழைத்திடாயே

பானுகோபன் கவி

தந்தையும் அழைத்த சேதிதனையனும் காதில் கேட்டு
விந்தையாய் மணிமுடி யலங்கரித்து வேணதோர் மந்திரி சூழ
அந்தர லோகவாசியான அமரர்கை கட்டிநின்று பதில்கூற
சுந்திர பானுகோபன் சபைநாடி வருகின்றேனே

பானுகோப சூரன் கொலு தரு

பாரினிப் புகழ் பெற்ற தீரன் எதிரியில்லா
பானுகோப சூரன் வாறேன்
சிறியோ ராக்ஷதர்கள் திரண்டசேனை நெருங்க
சுருள்[தீர வீரரும் பாரில் மன்னரும்
நேறில்வந்துமே கரமதை குவிந்திட (பா
நவரத்தினமுடி மின்ன தகதகன்று
எவர்களும் கீர்த்திகள் பன்ன
தவரில்லாத மந்திரிசட்ட திட்டகள் பன்ன
சுருள்) சண்டனை போலவே தண்டமு ஏந்தியே
பிண்டிபாலாவை கொண்டு தாங்கியே
ஆயிரத்திஎட்டு அண்டம் அதிலேயுள்ள
ஆதிமாயவன் வைகுண்டம்
மாய சமுத்திரம் சூழ் மத்தியிலுள்ள தீவுநகர்
சுருள்) முணிமுடி தாங்கியே துணிவுடன் யாளும்
இணையில்லாசூரன்மைந்தனும் நானே (பா

பானுகோபன் தரு

தந்தையே யுந்தன் தாளடி பேற்றி னேன்
சகலரும் தாள்பணியும் எந்தன் தந்தையே

சூரபத்மன் தரு

வத்தனம் செய்திட்ட சுந்திர மைந்தனே
வையகத்தில சுகமாய் நீ வாழ்ந்திருப்பாயே

பானுகோபன் தரு

வாழி என்று வாக்கு வாழ்த்திட்ட என் தந்தை
வரவழைத்திட்ட சேதிதனை சொல்லுசொல்லுமே

சூரபத்மன் தரு

சொல்லுவேன் கேளுமே சிவனிட மைந்தனும்
சேனைகள் தன்னை எல்லாம் வீணாய் மடித்தானே

பானுகோபன் தரு

மடியகம் சேனையை துடிக்கவே வதைசெய்த
மட்டி பையல் வேலவனை வீடுவேனோ

சூரபத்மன் தரு

விடங்கொண்ட சேனைகள் படைகளை கூட்டி
வேலவன் தனைமடித்து வாருமைந்தனே

பானுகோபன் கவி

அரனிட நுதல்விழியில் அவதரித்த முருகன் தன்னை
திரமுடன் தான் மடித்து சிக்கிரம் வருவேன் தந்தை
சிறப்புள்ள சிம்மாதனத்தில் சிங்காரமாயிருப்பாய்
உரங்கொண்ட சேனையோடே ஒருமித்து வருகுவீரே

பானுகோபன் தரு

விடைபெற்ற பானுகோப சூரன் நல்ல
வீரரை கூட்டியே வாறானே தீரன்
திடங்கொண்ட சணசிகம் போல கர்ச்சித்து
தீரமாய் வாறானே யாறுமுகன் மேலே
கொண்டலிடிபோல தட்டி சிரி தண்டு தளம்
கொடுமுடி சூரர்கள் நெருங்கிட மீறி
அண்டத்து தேவர்கள் கண்டு பயந்து
ஆகாயம் மேலண்டம் செல்லவே விண்டு (வி)

பானுகோபன் கந்தார்த்தம்

ஆரடா சுப்ரமணியா அறிவிலாமடையாகேளு
நேரடா சின்ன தந்தையான நிகரிலா தாருகாசூரனை
சீரடா தான் மடித்து சேனைகள் தனை கூட்டி
போரடா யுத்தமது செய்யவந்தாய்

தரு

பலமது யுனக்கு ஏதடா என்னை செயிக்க
புலம்பறிவாயோ வாதடா
அலைகடலுலகம் மலைகளும் படீரென
சரு) ஆட்டியே வில்லை நாட்டியே பூட்டி
அக்கினிகணையை விட்டேனே காட்டி (ப

சுப்ரமணியர் கந்தார்த்தம்

வரத்தினால் பலம்பெற்றோமென்று வானவரை சிறைபிடித்து
திறமுடன் தானடைந்து திறமாய் பேசவந்தாய்
அரக்கர்களை கருவறுக்க ஆறுமுகன் யுதித்துவந்தேன்
சிரங் கூப்பி பணிந்து நீயும்

தரு

தேவரை விடுவாய் சிறை நீக்கி
தவறினால் கெடுவாய்
அவனிதனையாள அரக்கருக்கினி செல்லாது
சரு) அகந்தை கொண்டுமே அழியாத சூரா
அறை கொடியில் சேனைமடிப்பேன் பாராய் (தே

பானுகோபன் தரு

திறவீரங்கள் சொன்ன ஆறுமுகனே யுந்தன்
திட்டசட்டத்திற்கு பயப்படுவேனோ
கெட்டிகாரதனத்தை விடுவேனோ
வாருதிபோல் திரண்டு வந்த சேனைகள் தன்னை
செருக்குகளடையவே காத்தாலடித்து கொன்றேன்

சுப்ரமணியர் தரு

கொடுமுடி தாருகனை மடித்தேனென்று கோபங்கொண்டு
குதித்துமே பேசவந்த தீரனே
வதைக்குறேன் யுந்தனை சூரனே
அடுக்கடுக்காக பாணம் தொடுத்து தொடுத்து மிக
மூடுக்குள்ள சேனைகளை மடிக்க விட்டேன் நோக

பானுகோபன் தரு

துடிக்க சேனைகள் தன்னை மடித்து வதைத்தெறிந்த
சுந்திர கந்தா யுன்னை பாரடா
பந்துபோல் பிடிக்குறேன் நேரடா
வெடிபட அண்டமும் பொடி பொடியாகவே
வடிவேலன் சேனைகள் துடித்து மடிய செய்தேன்

சுப்ரமணியர் தரு

அக்கினி கண்ணன் கோரைபல்லன் அரக்கர் தான் மடிய
ஆலகாலம்போல் எழுந்து சீறியே
அஸ்திரங்களை சொரிந்தேன் வாரியே
மிக்கவே கோட்டை வாசல் மீறிய சேனைகள் தன்னை
தக்கபேர்களை கொன்று தாக்கி வெறுங்களமாக்கினேன்

பானுகோபன் கந்தார்த்தம்

இரும்பு யக்கினி கோட்டை யாவையுந்தான் இடித்து
வெறுங்களமாக்கி வைத்த வேந்தனே கேளடா நீ
கருணையுள்ள ஆதிசிவ கடவுள் வந்தாலும் விடேன்
ஒருகணைக் கிடுலில்லை நீ

தரு

உடைத்து பொடியாகவே அதிகவீர
இடியஸ்திரம் விட்டேன் நோகவே
தடதடவென்றுசேனை கடகடன்று புறண்டு
சுருள்] தாவியே பூதகணம் மேவியே சிதரிட
ஆவியை விட்டுசிலர் பாவியெனசதரிட

சுப்ரமணியர் கந்தார்த்தம்

கதரியே பூதகணங்கள் கர்ச்சித்து பயந்துவாட
சிதரிட இடிபாணம் தீரனே விட்டாய்நீயும்
விதரியே யுத்தன்சேனை விரிட்டு யோடிபோக
பதரியே எழுந்து கரத்தில்

தரு

பளுவான வாளையெடுத்தேன உந்தன்சிரசை
பதரியே தான்பிடித்தேன்
துளுக்காமல் சிரசை துடிக்க வெட்டி தள்ளினேன்
சுருள்] தோத்தரித்தது தேவர் பார்த்துக்கொண்டாடிட
கார்த்திகை மாதர்மைந்தன் களிப்புடன் நின்றிட

சேனாதிபதி கவி

மதியுள்ள சூரபத்மா மாளாதசேனை யோடுசென்ற
பதிபுகழ் பானுகோபன் பாலசுப்ர மணியர்கையால்
சிதரியே தான்மடிந்து தென்திசை தானுஞ்சென்றான்
கதரியே புலம்பிவாடி கூறிட வந்தேனதானே

சூரபத்மன் தரு புலம்புவது

மைந்தனே பானுகோபா மடிந்தாயோடா மகனே
மகாபாவி யாகினின்றேன் என மைந்தனே
தந்திர மூளதம்பி தாருகா சூரனோடு
தான்மடிந்தாய் கந்தன்கையால் எந்தன் மைந்தனே
ஆயிரத்தி எட்டுஅண்டம் ஆண்டோமே பெருமையாக
அதிகபலம் எனக்குசொன்னாய் எந்தன் மைந்தனே
தாயாதி வர்க்கமுள்ள தானவ படையுமாண்டார்
தவித்தேனே ஒண்டியாக எந்தன் மைந்தனே (மை

சூரபத்மன் கவி

மந்திரி மாரேகேளீர் மைந்தனும் தான்மடிய
சிந்தைப்பு வாடலானேன் சேனையின் பலமும்போச்சு
அந்தமாய் இனியெனக்கு ஆதரவு யாருங்காணேன்
சுந்திர சிங்கமுகனை சீக்கிரம அழைத்திடாயே

சிங்கமுகாசூரன் வருகிற கவி

அண்ணன் சூரபத்மன் அழைத்திட்ட சேதிதன்னை
குண்ணுமல் காதில்கேட்டு கொக்கரித்து தான்எழுந்து

மண்ணுவின்ஞேர் தானதிர மணிமுடி யலங்கரித்து
திண்ணமாய் சபையைநாடி சிங்கமுகன வருகின்றேனே

சிங்கமுகாசூரன வருகிற தரு

தீரன் சிங்கமுகன் வந்தேன நல்ல
திடமுள்ள ரதமதிலே அடைவுடனே ஏறி
ஆரவாரமாய் சேனைசூழ மிக்க
அதர துங்கம்பேரி வாத்தியம் தாழ
சுருள்] அண்டர்களும் தொண்டுசெய்
கண்டுமாவி தெண்டனிட (தீ
சித்திர மணிமுடி மின்ன நல்ல
செகதாடு கச்சை பணிகளும் துன்ன
வெற்றிபுரியும்வீரர் கோடி தீர
வீரர்கள் சூரர்கள் யாவரும் காடி
சுருள்] வீறிடவே பேரிகையும்
காரிடி போலமுழங்க
அண்ண னழைத்தசேதி தன்னை இன்று
ஆனபாய் அறிந்திட இன்னதென்று முன்னே
சோண விடிபோல சீறி கண்டு
கோபமாய் வாருனே உக்கிறமுடன் மீறி
சுருள்] கொடுமுடி வேலவனை
தி டமுடனே தான்மடிக்க (தீ

சிங்கமுகன் தரு

அண்டர் உலகோர்மெச்சும் எந்தன் அண்ணுவே உந்தன்
அடிதனை மலர்சாற்றி வந்தனம் செய்தேன்

சூரபத்மன் தரு

வந்தனம் செய்துநின்ற எந்தன் தம்பியே எந்தன்
சிந்தையது வாடலானேன வாழ்வாய் நம்பியே (வ

சிங்கமுகன் தரு

சிந்தைநொந்து வாடவேண்டாம் எந்தன் அண்ணனே
சந்தேகம் தன்னைசொல்லும் சுந்திர அண்ணு (சி

சூரபத்மன் தரு

சுங்கிர வேலன்வந்து பானுகோபனை அவன்
துடிக்கவே மடித்துபோட்டான் என்ன செய்குவேன்

சிங்கமுகன் தரு

மைந்தன் இறந்தானஎன்று விசனம்வேண்டாமே அந்த
வடிவேலன் தன்னைகொண்டு வாரேன் இன்றுமே

சூரபத்மன் கவி

தம்பியே சந்தோஷம்கொண்டேன் தைரியம்நீ சொன்னதாலே
வெம்பியே இருந்தஎந்தன் விசனம் தன்னைதீர்த்தாய்

கும்பலாய் ரதத்திலேரி கூட்டியே சேனைதன்னை
வம்பன் வேலனைகொன்று வந்துமே சேருந்தானே

சிங்கமுகன் தரு சிந்து

அண்ணனிடம் விடையும்பெற்று சிங்கமுகன்
ஆங்கார கோபமுடன் தான் நடந்தான்
தண்டுதளம் சேனைகளை தானும்கூட்டி தீர
நடைபடா இடிபாணம் காதில் மாட்டி
அண்டர் முனிவர்வாட ரதத்தில் ஏறி
ஆனைசேனை வீரர்கள் நடக்கவே சீறி
கண்டான் வேலவனை கோபமுடன்
கக்கிய அக்கினிசுடர் மிக்கசொரிந்தான் தனனு

சிங்கமுகன் கந்தார்த்தம்

என்னுடா சுப்ரமண்யா என்னிட மைந்தனுன
சின்னவன் பானுகோபனை சிதரிட தான்மடித்தாய்
உன்னைநான் விடவுமாட்டேன் உம்மர்கள் துணைவந்தாலும்
மன்னியே வில்வளைத்து

தரு

மடமட வென்றுவிடுத்தேன் பாணங்கள் தன்னை
திடமுடனே தொடுத்தேன்
கடல் அலை போல்கொண்ட கண்கொண்ட சேனைதன்னை
சுருள்] சுதித்தாயே வீணுய வதைத்தாயே
சிதைப்பேனே யுன்னை மடிப்பேனே

சுப்ரமணியர் கந்தார்த்தம

மடித்திடுவேன் என்றுசொன்ன மகாபல சூருகேளாய்
துடிக்கவே இந்திரன் தன்னை சிறையது வன்பிடித்தீர்
நடித்துமே அரக்கரை கொல்ல நமனுக வந்துதித்தேன்
வெடித்துமே லண்டம் போனுலும்நீ

தரு

வேலவன் உன்னைவிடேனே கொன்றிடவே
சூலமதை கையில்கொண்டேனே
ஆலகாலம் போலசிரி அக்கினி பொறிபறக்க
சுருள்] ஆட்டினேனே கணை பூட்டினேனே
வாட்டினேனே சரம் நாட்டினேனே (மா

சிங்கமுகன் தரு

மாட்டியே வில்லைவளைத்தேன் உந்தனைகொல்ல
காட்டியே சரம்தொடுத்தேன்
கூட்டியே சேனைகளை வாட்டியே வதைத்திட
கொக்கரித்து சேனைகள் மிக்கவே சிதரிட
கொடுமுடி ரதமது பொடிபொடி யாகிட
கொமரதேவன் கண்டு மனமது உருகிட

சுப்ரமணியர் தரு

தேவரை சிறைபிடித்தாய் அட்டாசூரா
சின்னபின்ன மாகஎதிர்த்தாய்
தாவிவந்த சூரரை ஆவியை வதைத்தேனே
தடைபடா இடிபாணம் பிடிபட வருகுது
தலையும் அருந்துசிலர் கொலையும் சிதரிவிழ
தாக்கினேனே கணை போக்கினேனே (தே

சிங்கமுகன் தரு

சிவன்மைந்தன் என்றுபொருத்தேன் இன்னேரமட்டும்
இல்லதனை காம்எடுத்தேன்
அவுண சேனைகளை அழிக்கநீ எமனாக
ஆறுமுகனேவந்தாய் நேரில் மடிந்திடவே
ஆறு எதிரில்லாத சீறியே பாணம்விட்டேன்
ஆலகாலம் போலசீரி வேலவனை கொன்றிடவே (சி

சுப்ரமணியர் தரு

வந்தபாணத்தை தடுத்தேன் கரத்தினால்
வலுவை மிகக்குறைத்தேன்
இந்திர தேவர்மெச்ச எடுத்தேனே சத்திவேலை
இரதகஜ துரகபதாதிகள் ஏங்கிட
இடிபடடு சிங்கமுகன் இறந்துமே பொடிபட
இமையவர் கண்டுமே சர மலர்கள் சொரிந்திட (வ

சேனாதிபதி கவி

மன்னனே சூரபத்மா மகிழ்தளம் புகழும்தீரா
பன்னுவேன் யுத்தம்செய்ய பலமுடன் தானும்சென்ற
அன்புள்ள சேனையோடு அரக்கன் சிங்கமுகன்
உன்னித வேலன்கையால் உயிரது மடிந்தார்தானே

சூரபத்மன் தரு புலப்பல்

அய்யோயென்தன் விதிவசமோ அன்புள்ள தம்பிமாரே
பையவே வேலன்கையால் பதரிநீ மடிந்தாயோடா
அண்டமெல்லாம் பெருமையாக ஆண்டுவந்தோமே தம்பி
ஒண்டியாக என்னைவிட்டு ஒழிந்தீரே தம்பிமாரே
என்தனிட பெருமைபோச்சே ஈசன்மைந்தன் கெலிக்கலாச்சே
இந்திர தேவரெல்லா எந்தனை பழிக்கலாச்சே (அ

சூரபத்மன் கவி

சிங்கமுகன் யாளிஇரணிய சூரர் அனைவர்களையும்
சங்கரித்தான் வேலன் சாமர்த்தியம் போச்சுதின்று
தங்கநல் கோட்டைவாசல் தந்திர மந்திரிகளாய்
வெங்கல ரதத்திலேரி வீரறும் செல்வோம்தானே

சூரபத்மன் தரு ரதம் ஏறுவது

ரதம்ஏறிசென்றானே சூரபத்மன் ரதமேறிசென்றானே
ரதம்ஏறி சென்றான் பதறி வேலவன்மீது
சிதறி பூவுலகம் கதறி சேஷன்கலங்க (ர
அஷ்டதிக்கு பாலர்கஷ்டம் அடைந்திட
அதாதர் சமாதர் பதறியே சென்றிட
அண்டத்திலுள்ள தேவர் கண்டு கலங்கிட (ர
அதிவீரர் வெகுகோடி எதிராக நின்றிட
ஆனை சேனையுடன் தானவர் பெருகிட
ஆறுமுகவன் கண்டு மனமது உருகிட (ர

சூரபத்மன் கந்தார்த்த கவி

பாமனிட மைந்தனென்று ஆண்மைபேசி
பலங்கொண்ட அநேகம்பேர் வீரரான
அரக்கன் சிங்கமுகன் தாருகன்யாளி
அருமைமைந்தன் பானுகோபனை மடித்தாய்
திரமுடனே ஆயிரத்தி எட்டுஅண்டம்
தீரன்நான் இன்னாள்மட்டும் ஆண்டுவந்தேன்
சிரந்தால் தேவர்கள் என்னைகண்டு

தரு

சிரமது தாழ்வணங்குவார் கரங்கட்டி
சிந்தைசெய் திணங்குவார்
கரைகாணா வெள்ளம்போன்ற கதித்த சேனைகள்தன்னை
சுருள்] கந்தனே மடித்தாய் சிந்தையுநோக
உந்தனை விடுவேனோ குந்தகம் செய்வேன் (சி

சுப்ரமணியர் கந்தார்த்த கவி

சூரனே என்னை வெல்ல வலுவது யுனக்கில்லை
சொல்லுவேன் விபரமது நன்றாய் கேளும்
திரமாய் தேவர்களை சிறைபிடித் தடைத்ததால்நீ
தேவர்கள் வேண்டுகோளால் நானும
காரண கடவுளான சிவன்நுதல விழியில்தோன்றி
கபடமுள்ள சூரனை கருவறுக்க வேண்டி
சீரியே சரஹண பொய்கை தனிலுதித்த

தரு

சிவசுப்ர மண்யன்நானடா அடடாசூரா
சிரங்கூப்பி பதில்பன்னடா
நவவீரர்கள் எல்லாம் நவிலுவேன் எந்தன்தம்பி
சுருள்] நல்லதேவரை சிறையது விடுவாய்
இல்லை என்றால்பலி இப்பவே இடுவேன் (சி

தரு

தேவரை சிறைவிடுவேனோ வடிவேலா கேளாய்
சேவடி நான்பணிவேனோ
பாவிஎந்தன் சேனையை தாவி மடித்தாய்நீயே
பாருலகம் நடுங்க சிறில் வில்லைவளைத்து
பாணவுடனே சரம் ஓங்கி தொடுத்தேனிதோ
பாரிய சேனைகளை சிரி மடித்திடவே
பார்த்து பூதகணங்கள் ஆத்திர முடனேயோடி
பாச நமனுலகம் நேசரும் சேர்ந்திட (தே

சுப்ரமணியர் தரு

அரக்க சூரனே கேளடா ராக்ஷதபேயே
அமரரை மீட்டேன் நானடா
கரத்தில் வில்லையெடுத்து நெறியுடனே பிடித்து
கக்கியே அக்கினிகளை மிக்க விடுத்தேனிதோ
கடினமுள்ள சேனை பொடிபடவே நாடி
கவசம் சிரமறுந்து தவரி விழவேசிலர்
கதரி பதரிசிலர் சிதரி மடிந்திடவே
கண்டு சூரபத்மன் கடுங்கோபம் கொள்ளவே (அ

சூரபத்மன் தரு

தண்டுசக்கரம் சூலம்எடுத்தேன் பரமன் கொடுத்த
தணல் யக்கினி கணைவிடுத்தேன்
அண்டர் முனிவர்கண்டு மேலண்டம் ஓடிட
அஸ்திரங்கள் பெருகி கஸ்தியடையசேனை
அரகரா என்றுசிலர் கரமலர் குவித்திட
அருந்து குடல்சரிந்து பெருஞ்சேனை மடிந்திட
அறுமுக வனுங்கண்டு உருகி மனதுவாட
அடிபணிந்து வீரர் நெடியகரங் குவிக்க (சூ

சுப்ரமணியர் தரு

அண்டபிண்டம் யாண்டசூரனே செல்லாதுவீரம்
அகங்காரம் கொண்டாய்நீரனே
மண்டலத்தை யாண்டதேவர் தொண்டுசெய்தாரென்று
மதுத்துவத்தை கெகண்டு மிகுந்த சேனையைகண்டு
மறித்து யூகம்யுடைத்து நெறித்து சண்டைசெய்ய
மண்ணு விண்ணுமதிர எண்ணில்லா கணைவிட்டு
மகுட கவசங்களை விகுத்தாய் யறுத்திட்டேனே; (அ

சூரபத்மன் கந்தார்த்தம்

எண்ணில்லா சேனைகள் யாவையும் தான்மடித்து
புண்ணாக நெஞ்சுருகி புறமுதுகிட் டோடிவிட்டான்
ஒண்டியு மானேனையோ ஓடினால் கந்தன்விடான்
மண்ணில் முளைத்துநின்ற

தரு

மறுமாமு மாகினேன் ரூபத்தைமாற்றி
மனதுருண்ணி ஏகினேன்
முருகன் எனைகாணாமல் மனமது தான்வெறுத்து
சுருள்] மூனைந்துமே கோட்டையை சுற்றியே பார்த்து
கனைத்துமே வசனம் கழறவே பூர்த்து (ம

சுப்ரமணியர் கந்தார்த்தம்

அரக்கனவன் போர்செய்யாமல் அவன்ரூபம் தன்னைமாற்றி
திரமுள்ள மறுமரமாய் தீரனாய் நின்றபோது
உரங்கொண்ட மரந்தை உடைக்கவே வேல்விட்டு
மரத்தினுள் இருந்தசூரன்

தரு

மயிலும் சேவலுமாகவே கந்தனுங்கண்டு
ஒயிலாய் ஏறினார் நோகவே
அயனறி தேவர்முதல் அமரர்கள் மலர் தூற்ற
சுருள்] ஆயிரங் கண்ணனும் தாவியேவந்து
அன்புடன் சரணம் செய்திட தந்து

இந்திரன் கவி

சூரனை சம்ஹரித்து தேவர்கள் சிறையைமீட்ட
அறுமுகனே சுவாமி அன்புள்ள என துசெல்வி
காரிழை தெய்வகுஞ்சரி கன்னியை மணந்துசெல்வீர்
சிடா காவல்காறுய் செல்வியை யழைத்திடீரே

தெய்வகுஞ்சரி வருகிற விருத்தம்

தந்தையு அழைத்தசேதி தையலும காதில்கேட்டு
சிந்தையும் மகிழ்ச்சியாக சிறந்தநல் பணிகள்பூண்டு
மந்தாரை முல்லைரோஜா மலர்களை சிரம் அணிந்து
இந்திரன் செல்வியான ஏந்திழை வருகின்றாளே

தெய்வகுஞ்சரி வருகிற தரு

வந்தாள் தெய்வகுஞ்சரி மாது அதி ஒயிலாள்
விந்தை தனில்சிறந்த சாது
செந்தாமறை முகத்தில் திலர்தம் தளதளன்ன
சுருள்] சித்திரம்போல பத்தினிமாது
உத்தம வேதர்கள் நத்திடும்சாது
சேலை சரிகையாடை மின்ன தகதகன்று
சித்திடை யொட்டியாணம் துன்ன
வாலை வாய்தடைய வஞ்சி இவளென்ன
சுருள்] வாசனை பரிமள வாடையுவீச
பாசமாய் சேடியர் நேசமாய் பேச

தெய்வகுஞ்சரி தரு

தேவர்க் கதிபதி தந்தையே மாது
தெய்வகுஞ்சரியும் விந்தையே

மேவிடும் திருவடி முல்லை மலர்சாற்றி
தாவியே சேயிழை தாளடி போற்றினேன் (தே

இந்திரன் தரு

சுந்திரம் மிகுந்தசெல்வியே தேவர்
வந்து மகிழ்ந்திடும் புதல்வியே
தந்தேன் ஆசிர்வாதம் தாரணி தன்னிலே
எந்தனாளும் கீர்த்தி ஏந்திழை வாழ்குவாய்

தெய்வகுஞ்சரி தரு

சந்தோஷம் கொண்டேனே தந்தையே நீரும்
எந்தனை இன்று விந்தையே
சிந்தை மகிழ்ச்சியாய் சிர்சபை யழைத்ததை
குந்தக மில்லாமல் கூறுவீர் கருத்ததை (சு

இந்திரன் தரு

கந்தசுவாமிக்கு திருமணம் உன்னை
விந்தையாய் செய்திட நல்மனை
சந்தேக மில்லாமல் சபைக்குனை அழைத்தேனே
சுந்திர மகளே சிந்தையும் களித்தேனே (சு

நாரதர் தரு

திருமணம் முடித்திட வேலனே இன்னம்
சிந்தை என்றுகொண்டீர் சீலனே
பெருமைய தாகவே அரிவை குஞ்சரியை
கருணையாய் திருமணம் ஒருமையாய் முடிப்பீரே (தி

சுப்ரமணியர் தரு

தேவரே சந்தோஷம் கொண்டேனே மணம்
சிறப்புடன் முடிப்பீரே விண்டேனே
தாவியே தேவர்கள் யாவரும் வந்ததால்
பாவையை திருமணம் பாசமாய் முடிப்பீரே (தே

நாரதர் கவி

அருமுகா சொல்வேன்கேளு அமரர்சிறை நீக்கிவைத்து
கருணைகூர் குஞ்சரி கன்னிகையை மணமுடித்தீர்
பெருமையாய் கைலாயம் பூசுர முனிவர்கள சூழ
முருகனை சென்றுவாழும முனிவர்போற்றி செய்தோம்தானே

53179

ஸ்ரீ சுப்ரமணியர் தெய்வயானை திருமணத்துடன்
இந்நாடகம் முற்றிற்று

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

ஸ்ரீலக்ஷ்மி வாசன் பிரஸ் 12 அமிர்தவாழியம்மன் கோவில்வீதி
திருப்பாதிரிப்புலியூர். 27—5—50, கா. 1000

25 FEB 1956